தனிப் பிரதி ரூ. 10/–
ஆண்டுச் சந்தா ரூ. 100/–
ஆயுள் சந்தா ரூ. 500/–

Shalom

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 10
இதழ் : 1
நவம்பர் – 2013



".... இயேசுவானவர் எப்படி
உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு
எழுந்தருளிப்போனாரோ,
அப்படியே மறுபடியும் வருவார்..."

(அப்போஸ்தலர் 1 : 11)

ஆசிரியர். பேராயர். வே. தேவதாஸ்



## ஷாலோம் கிராம ஆலயம்

### மாஜியா இராஜஸ்தான்

மாஜியா என்ற கிராமம் இராஜஸ்தான் பான்ஸ்வாடா மாவட்டம் கடி என்ற தாலுகாவில் அமைந்துள்ளது. பாஸ்டர். மூல்சந்த் சர்போட்டா என்பவர் இந்த கிராமத்தைச் சேர்ந்த ஆதிவாசி ஆவார். 20 வருடங்களுக்கு முன்பு இயேசுவை அறியாதவர்களாய் வாழ்ந்த போது, 1992 ஆம் ஆண்டு இவருடைய சகோதரி. பிரமிளா, பிசாசு பிடித்து அதிகமாய் அவதிப்பட்டாள். இவளுடைய விடுதலைக்காக ஆடு, கோழிகளைப் பலியிட்டு மந்திரப் பூஜைகள் செய்து சுமார் 60,000 ரூபாய் வரை செலவு செய்தும் விடுதலை கிடைக்காமல் அலைந்த நேரத்தில், இவருடைய மாமா மூலம் இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டு பிஜல்பூரில் உள்ள போதகர். பர்த்திங் அவர்களிடம் கொண்டு சென்று ஜெபித்த போது, பூரண விடுதலை பெற்றாள்.

அந்த நாளிலிருந்து இயேசுதான் விடுவிக்கிற தேவன் என்று அறிந்து குடும்பமாக இயேசுவை ஏற்றுக் கொண்டார். பின்பு 2001 இல் ஊழியத்திற்கென்று தன்னை அர்ப்பணித்து, இராஜஸ்தானில் ஜும்க்கி கிராமத்தில் நடைபெற்ற ஷாலோம் வேதாகமப் பயிற்சி முகாமில், 1 மாத பயிற்சி பெற்று, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டார். பின்பு மாஜியா கிராமத்தில் ஊழியம் செய்ய ஆரம்பித்து, தற்போது 30 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு ஆராதித்து வருகிறார்கள். மாஜியா கிராம ஆலயம் கடி தாலுகாவில் கட்டப்பட்ட 2 ஆவது ஆலயமாகும்.

இந்த ஆலயம் 40 x18 என்ற அளவில் ரூ. 1,70,000 மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டு 13–10–2013 அன்று திரு. ஏசுமோகன் (புத்தளம், கன்னியாகுமரி மாவட்டம்) அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த குடும்பத்தினர் அளித்த ரூ.1,10,000 நிதி உதவியினால் இந்த ஆலயம் கட்டப்பட்டது. தேவனுக்கே மகிமை!



**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2013 ஆம் ஆண்டிற்குள் 84 ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**

## உங்கள் சகோதரனிடமிருந்து



*கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!*

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

கர்த்தருடைய மாபெரும் தயவாலும் உங்கள் யாவரின் ஊக்கமான ஜெபங்களினாலும், உற்சாகமான ஆதரவுகளினாலும் பீல் மக்கள் மத்தியில் ஷாலோம் ஊழியங்கள் அவர் தந்த தரிசனத்தின்படி ஆசீர்வாதமாக நடைபெற்று வருகிறது. கடந்த அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற ஒவ்வொரு ஊழியங்களையும், கூட்டங்களையும் அபரிவிதமாக ஆசீர்வதித்த தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

விசேஷமாக 2013 அக்டோபர் 7,14,21 ஆகிய தேதிகளில் மத்தியப்பிரதேசம், குஜராத், இராஜஸ்தான் மாநிலங்களில் ஷாலோம் மிஷன் ஞாயிறு ஆராதனைகள் தேவ நாம மகிமைப்பட சிறப்பாக நடைபெற்றது. அதைத் தொடர்ந்து அக்டோபர் 8,15,22 ஆகிய தேதிகளில் மூன்று மாநில சுதேச ஊழியர்கள் கூட்டத்தில் அனைத்து ஷாலோம் மிஷன் ஞாயிறு கவர் காணிக்கைகளை தங்கள் சபை மூப்பர்களுடன் ஊழியர்கள் அர்ப்பணித்தார்கள். ஏழை எளிய விசுவாசி ஷாலோம் ஊழியர்கள் மற்றும் திருமண்டலத்திற்காக தேவனை துதித்து ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய ஜெபத்தில் தங்களை அர்ப்பணித்தார்கள். இதுவரை தேவ கிருபையால் ரூ. 20 இலட்சங்களை ஷாலோம் ஸ்தல திருச்சபையார் படைத்தமைக்காக தேவனைத் துதிக்கிறோம்.

கடந்த 2013 அக்டோபர் மாதத்தில் சென்னையிலிருந்து நம் ஷாலோம் ஊழியங்களை அதிகமாக நேசிக்கும் அன்பு போதகர்கள் **பாஸ்டர். மோசஸ் ஜெபராஜ்**, (இம்மானுவேல் ஜெப வீடு) அவர்கள் தலைமையில் **பாஸ்டர். அற்புத சீயோன்** (நித்திய வாழ்வு சபை) **பாஸ்டர். ஜான் வெஸ்லி** (மாரநாதா சபை) **பாஸ்டர். ஜான்** (ராஜாதி ராஜா சபை) போன்றோர் குழுவாக வந்து 12 பணித்தளங்களைக் குறிப்பாக சுமார் 20 கிராம ஆலயங்களைப் பார்வையிட்டு ஊழியங்களை நிறைவேற்ற தேவன் கிருபை தந்தார்.

இராஜஸ்தான் மாநிலத்தில் **"மாஜியா"** கிராம ஆலயத்தை 13.10.2013 ஞாயிறு அன்று புத்தளம் **சகோ. ஏசு மோகன்** குடும்பம் தலைமையில் ஜெபித்து திறந்து வைத்து பிரதிஷ்டை செய்து தேவ நாமத்தை மகிமைப்படுத்தினார்கள். அக்டோபர் 20, 21 ஆகிய இரு தினங்கள் சென்னையில் இருந்து அன்பு **சகோ. டென்சிங் ராஜ்குமார்** அவர்கள் குடும்பமாக பணித்தளத்திற்கு வருகை தந்து மத்தியப்பிரதேச மாநிலத்தில் டெமோரா கிராம ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்து தேவ நாமத்தை மகிமைப்படுத்தினார்கள்.

2.10.2013 அன்று சென்னை வானகரத்தில் இயேசு அழைக்கிறார் நடத்திய தேசத்தின் ஆசீர்வாதத்திற்கான உபவாசக் கூட்டத்தில் பங்கு பெறவும் நம் பாரத தேசத்திற்கான விசேஷ ஜெபத்தை ஏறெடுக்கத் தேவன் கிருபை தந்தார். மேலும் அக்டோபர் 10 முதல் 12 வரை குஜராத் அகமதாபாத்தில் **"இயேசு அழைக்கிறார்"**. தீர்க்கதரிசன மாநாடு சுமார் 2300 பேர்களுக்கு நடைபெற்றது. அந்த மாநாட்டில் நாங்கள் குடும்பமாக பங்கு பெறவும் **"அபிஷேக வேளை"** பகுதியில் செய்தி தந்து பரிசுத்த அபிஷேகத்திற்குள் வழி நடத்த தேவன் கிருபை

தந்தார். நம் ஷாலோம் சபைகளில் இருந்து **400–க்கும்** அதிகமானோர் கலந்து கொண்டு தெய்வீக ஆசீர்வாதங்களைப் பெற்று தேவனை மகிமைப்படுத்தினார்கள். குஜராத் மாநிலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும், பல மாநிலங்களிலும் இருந்து பங்கு பெற்ற யாவரும் வல்லமையான தீர்க்கதரிசன அபிஷேகத்தைப் பெற்று குஜராத் எழுப்புதலுக்கு ஆசீர்வாதமாகச் சென்றார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

விசேஷமாக அந்நாளில் அன்பு **சகோதரர். டாக்டர். பால்தினகரன்** அவர்கள் காந்தி நகரில் குஜராத் மாநில முதலமைச்சர் **மாண்புமிகு. நரேந்திரமோடி** அவர்களைச் சந்தித்துப் பேசி அவர்களுக்காக ஜெபித்து வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதத்தில் ஹிரோலா, ஜெரி, அந்தர்வேலியாவில் Compassion மூலமாக கல்வியறிவில் பயன்பெற்று வரும் சுமார் **800** ஆதிவாசிப் பிள்ளைகளுக்குச் சிறப்பு ஆவிக்குரிய முகாம்கள் நடைபெற்றது. **3** மாநிலங்களிலும் **48** கிராமங்கள் விசேஷித்த சுகமளிக்கும் கூட்டங்கள் நகரேலா, கோய்க்கா பகுதிகளில் சிறப்பாக நடைபெற்றதில் அற்புதமான சாட்சிகளைத் தேவன் எழுப்பித் தந்ததற்காகத் தேவனைத் துதிக்கிறோம்.

தேவனுக்குச் சித்தமானால் இந்த இதழ் உங்கள் கரங்களில் கிடைக்கும் போது **நானும்** என் மனைவி **வஹிதாவும்** இஸ்ரேல் தேசத்தில் எருசலேமில் இயேசு அழைக்கிறார் ஜெபக் கோபுரத் திறப்பு விழா சிறப்பு வைபவத்தில் அக்டோபர் **29** முதல் நவம்பர் **6** வரை பங்கு பெறுகிறோம். எங்களை சிறப்பு விருந்தினர்களாக இயேசு அழைக்கிறார் அன்பு **சகோதரர் Dr. பால் தினகரன்** அவர்கள் அழைத்திருக்கிறபடியால் தேவனைத் துதிக்கிறோம்.

**ஜெபியுங்கள் :**

நவம்பர் மாதத்தில் நம் ஷாலோம் சுதேச ஊழியர்கள், வாலிபப்பிள்ளைகள் சுமார் **500** பேர்களுக்கான சிறப்பு முகாம்கள் நடத்தபட உள்ளது. தேவன் அவர்களை பரிசுத்த ஆவியால் நிரப்பிடவும் அனைவரும் தேவனுக்கு சாட்சியாக எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

**2013** நவம்பர் **18** முதல் **21** வரை குஜராத் ஆனந்த் பட்டணத்தில் உள்ள பெராக்கா சென்டரில் வைத்து நடைபெற உள்ள ஷாலோம் சுதேச ஊழியர்களின் குடும்ப அக்கினி முகாமிற்காக ஜெபியுங்கள். இம்முறை இயேசு விடுவிக்கிறார் குழுவினர்களுடன் **சகோ. ஜஸ்டின் ஆபிரகாம்** (வாரங்கால் A.P) குடும்பம் மற்றும் பாளையங்கோட்டையில் உள்ள துதியின் கோட்டை தலைமைப் போதகர் **Dr. ரத்தினம் பால்** அவர்களும், மும்பை **பாஸ்டர். டேனியல்** அவர்களும் பங்கு பெற உள்ளார்கள். உங்களால் முடியுமானால் **1** நாள் உபவாசித்து ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.


**“இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும்**
**நான் உங்களுடனே கூட இருக்கிறேன்....” (மத்தேயு 28:20).**

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்)

கீழ்க்கண்ட அலைபேசி எண்ணுடன் என்னோடு தொடர்பு கொள்ளவும்
**09377445468** (குஜராத்) **9443965468** (தமிழ்நாடு)

# Uà ` ÏUôWu ùY° ITÓm Sôs



சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

***கர்த்தருடைய இனிதான நாமத்தினால் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.***

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை மிக சமீபம் என்று வேத வசனங்கள் நம்மை உணர்த்திக் கொண்டிருக்கிறது. நாமும் அவரது இரண்டாவது வருகையை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருக்கிறோம். அநேக வேதப் பண்டிதர்கள் கடைசிகால தீர்க்கதரிசன வியாக்கியானங்களையும், ஆவிக்குரிய கருத்துக்களையும் சபைக்கு எடுத்துரைத்து வருகிறார்கள். இப்போது நடைபெறும் பல சம்பவங்களை உலகத்தில் காணும்போது நம் உள்ளம் உருகுகிறது. கொடிய பஞ்சங்கள், வெள்ளங்கள், கடல் அலை சீற்றங்கள், தீயினால் வரும் சேதங்கள், பூமி அதிர்ச்சிகள், பேரழிவுகள், கொடிய விபத்துக்கள், கலவரங்கள், தீவிரவாதங்கள், கொடுமையான நோய்கள், தேசத்திற்கு விரோதமாக தேசங்கள், போர்கள், விஞ்ஞான உலகின் கண்டுபிடிப்புகள் அனைத்தையும் காணும் போது கடைசி காலத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம் என்பது தெரிகிறது.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, **“மனுஷகுமாரன் வெளிப்படும் நாள்”** என்று தமது இரண்டாவது வருகையைக் குறித்துத் தெளிவாக கூறியுள்ளார். லூக்கா 17:20–37 வரை வாசித்துப் பாருங்கள். மனுஷகுமாரன் வெளிப்படும் நாட்கள் நெருங்கும்போது உலகத்தில் உள்ள ஜனங்கள் எப்படிப்பட்டவர்களாயிருப்பார்கள் என தெளிவாக எழுதப்பட்டுள்ளது. நோவாவின் நாட்களையும், லோத்தின் நாட்களையும் நினைவு கூரும்படி இயேசு கிறிஸ்து குறிப்பிட்டுள்ளார். அவர்களின் நாட்களில் நடந்த சம்பவங்களைப் போலவே, மனுஷகுமாரன் வருகையின் நாளிலும் நடக்கும் என்று இயேசு தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார்.

பரிசுத்த பவுல் II தீமோத்தேயு 3:1–5 இல் எழுதியிருப்பதை வாசித்துப் பாருங்கள். மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக! எப்படியெனில் மனுஷர்கள் ◆ தற்பிரியராயும் ◆ பணப்பிரியராயும் ◆ வீம்புக்காரராயும் ◆ அகந்தையுள்ளவர்களாயும், ◆ தூஷிக்கிறவர்களாயும் ◆ கீழ்ப்படியாதவர்களாயும் ◆ நன்றியறியாதவர்களாயும், ◆ பரிசுத்தமில்லாதவர்களாயும் ◆ சுபாவ அன்பில்லாதவர்களாயும் ◆ இணங்காதவர்களாயும் ◆ இச்சையடக்கமில்லாதவர்களாயும் ◆ பகைக்கிறவர்களாயும் ◆ துரோகிகளாயும் ◆ துணிகரமுள்ளவர்களாயும் ◆ இறுமாப்புள்ளவர்களாயும் ◆ சுகபோகப்பிரியராயும் ◆ வேஷம் தரித்து தேவப் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்.

இந்த வசனங்களின் வெளிச்சத்தில் நாம் பார்க்கும்போது எவ்வளவு ஜாக்கிரதையாக நம் விசுவாசம், இரட்சிப்பு, அழைப்பு போன்றவைகளைக் காத்துக் கொள்ள வேண்டும் என்பது புரிகிறது. இயேசு கிறிஸ்து லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். அவளுடைய வாழ்க்கை எவ்வளவு பரிதாபமான முடிவாய் இருந்தது என்று நாம் லோத்தின் மனைவியைக் குறித்து சற்று ஆராய்வோம். அவள் பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூணாக மாறினாள் என்று வேதத்தில் வாசிக்கிறோம். நாமும் லோத்தின் மனைவியைப் போல பின்னிட்டுப் பாராதபடி முன் செல்ல நம்மை அர்ப்பணிப்போம்.

## கிருபையை இழந்த லோத்தின் மனைவி

வேதத்தில் பாபேல் கோபுரத்தின் சாபத்திற்குப் பின்பு, தேவன் பாவ உலக மக்களை இரட்சித்து ஆசீர்வதிக்க ஒரே ஒரு குடும்பத்தை அதாவது ஆபிரகாம் குடும்பத்தை (ஆதி. 12 ஆம் அதிகாரத்தில்) அழைத்தார். ஆபிரகாம் எல்லாவற்றையும் விட்டு விட்டு புறப்படும்போது, லோத்தை மட்டும் தன்னுடன் அழைத்துக் கொண்டார். தேவனும் லோத்தின் குடும்பத்திற்கு ஆபிரகாம் நிமித்தமாக கிருபை பாராட்டினார். ஆபிரகாம் நிமித்தமாகத்தான் லோத்திற்கு தேவ கிருபை கிடைத்தது. தேவன் சோதோமை அழிக்க நினைத்த போது, தம் தாசன் ஆபிரகாமின் விண்ணப்பத்தின் நிமித்தம் லோத்தின் குடும்பத்தார் மீது கிருபை பாராட்டினார். தேவ தூதர்கள் அவர்களின் கரங்களைப் பிடித்து ஊர் என்ற இடத்திற்குச் செல்லவும் தேவன் கிருபை பாராட்டினார். இத்தனை கிருபைகளை தேவன் பாராட்டியும், அவள் மனைவி அந்தக் கிருபையை இழந்து விட்டாள் எனக் காண்கிறோம்.

**எனக்கன்பானவர்களே!** நம் வாழ்க்கை மற்றும் ஊழியப் பாதையில் நமக்குத் தேவன் பாராட்டின கிருபை, இரட்சிப்பு, அபிஷேகம், நன்மைகள், ஊழியப்பாதையில் வழிநடத்தல், சுகம் பெலன் போன்றவற்றைத் தந்த தேவனை நினைத்துத் தினமும் அவரைத் துதிக்க வேண்டும். நாம் நிற்பதும் நிர்மூலமாகாமலிருப்பதும் அவர் கிருபையே! நாம் அந்த கிருபையில் நிலைத்திருக்கும்போது ஆசீர்வாதத்தை இழந்து விடமாட்டோம். தேவன் கிருபையாக அழைத்து பயன்படுத்தும்போது, ஆசீர்வதித்து உயர்த்தும்போது, தேவன் வெறுக்கிற பெருமை என்ற பொல்லாத பாவம் நமக்குள் வந்து கிருபையை இழந்து விடாதபடி நாம் கவனமாய் நடந்துக் கொள்வோம். அவர் நமக்காக அளிக்கும் அதிகமான கிருபையைத் தொடர்ந்து சுதந்தரித்துக் கொள்வோம்.

ஆதலால், தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று யாக்கோபு 4:6– இல் சொல்லியிருக்கிறது ஆகவே ஒருவேளை கிருபையை இழந்திருந்தாலும் கூட, தேவ பாதத்தில் கதறிய சிம்சோனைப் போல, நாமும் நம்மைத் தாழ்த்தி அவர் கரத்தில் ஒப்புக் கொடுப்போம். நிச்சயமாக மறுபடியும் இழந்துப் போன கிருபைகளைத் தேவன் உங்களுக்குத் தந்தருள்வார். லோத்தின் மனைவியைப் போல் தேவன் நமக்குத் தந்த கிருபைகளை இழந்து விடாமல் காத்துக் கொள்வோம்.

## தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமை

லோத்தின் குடும்பத்தார் மீது தேவன் இரக்கம் பாராட்டினார். ஆகவே தான் தேவ தூதர்கள் சோதோம் பட்டணத்தை அழிப்பதற்கு முன்பாக, லோத்தின் வீட்டிற்கு வந்து விருந்து சாப்பிட்டார்கள். தேவத் திட்டத்தை விளக்கிக் கூறக் கேட்டார்கள். மேலும் சோதோமின் தீய மனிதர்களின் கைக்கு விலக்கிக் காத்தார்கள். லோத்தின் குடும்பத்தார் சோதோம் பட்டணத்தை விட்டுப் புறப்படத் தாமதித்த போது 4 பேரின் கைகளைப் பிடித்து வெளியேற்றினார்கள். அவர்களின் தயவான வேண்டுதல்படி அருகில் உள்ள பட்டணம் வரை செல்ல அனுமதிப் பெற்றார்கள். ஆனால் **"பின்னிட்டுப் பாராதே"** என்று தேவதூதர்கள் கொடுத்த அந்தக் கட்டளைக்குக் கூட லோத்தின் மனைவி கீழ்ப்படியவில்லை. இந்த கடைசி நாட்களிலும் தேவன் நமக்கு எவ்வளவு கிருபைகளைப் பாராட்டினாலும், அவர் வார்த்தைக்கும், வசனத்திற்கும் கீழ்ப்படிய வேண்டும். நாம் எப்படி வாழ வேண்டும்? குடும்பம் எப்படி இருக்க வேண்டும்? சபையில் நம் பொறுப்புகள் என்ன? எப்படி ஊழியம் செய்ய வேண்டும்? என்ற எல்லாக் கற்பனைகளையும்,

கட்டளைகளையும் தேவன் நமக்குத் தந்துள்ளார். ஆனால் நாம் இவற்றை எல்லாம் அறிந்தும் அவர் வசனத்திற்குக் கீழ்ப்படியவில்லையானால், தேவக் கோபாக்கினை நம் மீது வருவதுடன் அவர் நமக்கு அளித்த கிருபைகள் நம்மை விட்டுக் கடந்து விடும். எனவே நாம் தண்டனைக்குள்ளாகாதபடி எச்சரிக்கையுடன் வாழ்வோம்.

## தேவனுடைய வார்த்தையில் விசுவாசம் இல்லாமை

தேவன் தந்த கிருபைகளையும் பாராட்டின நன்மைகளையும் உணர்ந்து அவர் சொன்னபடி நடந்தால் தேவன் நம்மை நடத்தி நம்மை ஆசீர்வதிப்பார் என்ற விசுவாசம் லோத்தின் மனைவியிடம் இல்லாமல் போயிற்று. தன் கையினால் சம்பாதித்த பணம், வீடு, உலக ஆஸ்திகள் மீது நம்பிக்கை வைத்து, ஆசீர்வாதங்களை நமக்குத் தரும் தேவன் மீது நம்பிக்கை வைக்காமல் எதிர்காலத்தைக் குறித்த பயம், அநித்தியமான உலகத்தின் மீது நம்பிக்கை ஆகியவற்றுடன் இருந்தது மட்டுமல்லாமல் அவளின் இருதயம் கர்த்தரை நம்பாமல் அநித்தியமான பாவங்களில் இருந்தது. மேலும் சோதோம் ஜனங்கள் புசித்து, குடித்து வெறிப்பதிலும், பெண் கொள்வதிலும், கொடுப்பதிலும் மூழ்கியிருந்தார்கள். எங்கு உங்கள் பொக்கிஷம் இருக்குமோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் என ஆண்டவர் கூறுகிறார். எதிர்காலத்தை நடத்துவதற்கு ஆபிரகாமின் தேவன் வல்லமையுள்ளவர் என்ற விசுவாசம் லோத்தின் மனைவிக்கு இல்லாமற் போயிற்று.

## அநித்தியமான உலகத்தின் மீது ஆசை

லோத்தின் குடும்பத்தைத் தேவன் தெரிந்து கொண்டு, அழிவிலிருந்து அவர்களைத் தப்புவிக்க அனைத்து காரியங்களையும் தேவன் நடப்பித்தபோதும் லோத்தின் மனைவி பின்னிட்டுப் பார்த்தாள். அவள் இருதயம் தேவனுக்கு நேராக இல்லை. சோதோமின் பாவங்கள், மனுப்புத்திரரின் உலக ஆசைகள் அவளைப் பின் திரும்ப வைத்தது. அவள் மனம் புதிதாக மாற்றப்படவில்லை. மேலும் புசிப்பதிலும், குடிப்பதிலும், வேசித்தனத்திலும் நிறைந்த சோதோம் மக்கள் மீதே லோத்தின் மனைவியின் மனம் சென்றது. இன்றும் அநேகர் தேவபிள்ளைகளாக இருந்தும், அவர்களது இருதயமும் நிறைவும் எங்குள்ளது? தேவன் இன்றைக்கும் நம்மைத் தப்புவிக்கத் தெரிந்துக் கொண்டு கையைப் பிடித்து இழுத்து வந்தாலும் கூட நம்முடைய இருதயம் எங்கே உள்ளது? எப்படி உள்ளது? நமது உள்ளத்தில் குடியிருந்தப் பொல்லாத நினைவுகள் தேவனை மறக்கச் செய்து நம்மைப் பின்னாகத் திரும்பிப் பார்க்க வைக்கிறது. எனக்கன்பானவர்களே! கடைசிக் காலங்களில் நாம் வாழ்ந்து வருகிறோம். எனவே நாம் தேவனை நோக்கி முன் செல்கிறோமா அல்லது உலக சிற்றின்பங்களை நோக்கிப் பின் செல்கிறோமா என்று நம்மை ஆராய்ந்து பார்ப்போம்.

◆ லோத்தின் மனைவியைப் போல் கிருபையை இழக்காமல் ஜெபத்துடன் பாதுகாப்போம். ◆ தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவோம். ◆ தேவனுடைய வார்த்தையில் விசுவாசம் கொள்வோம். ◆ அநித்தியமான உலகத்தின் ஆசைகளை விலக்கி கிறிஸ்துவுக்காக நாம் ஜீவனம் செய்வோம்.

**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக.** (I தெசலோனிக்கேயர் 3:13)

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்



* குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வசிக்கும் ஒரு கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் அனைவரும் நமது தலைமுறையில் இரட்சிக்கப்படவும், அவர்கள் வசிக்கும் 7000 கிராமங்களிலும் ஊழியர்கள் மற்றும் சபைகள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.
* பணித்தளங்களில் ஒவ்வொரு வெள்ளியும் நடைபெற்றுவரும் சுகமளிக்கும் ஆராதனைக்காக, அதில் அநேகர் கலந்து கொண்டு அற்புதங்களைப் பெற்று தேவனண்டையில் சேர ஜெபியுங்கள்.
* தேவக் கிருபையினால் தற்போது 3 மாநிலங்களிலுள்ள 23 கிராமங்களில் நடைபெற்று வரும் ஆலயக் கட்டுமானப் பணிகளை தேவன் ஆசீர்வதிக்கவும், அதற்கானத் தேவைகளை தேவன் சந்தித்து, ஆலயங்கள் பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.
* Shalom Charity Mission மூலமாக தாங்கப்பட்டு வரும் பீல் ஆதிவாசி மாணவர்களை தேவன் நல்ல ஞானத்தைத் தந்து ஆசீர்வதிக்கவும், அவர்களின் கல்வித் தேவைகளைச் சந்திக்கவும், ஆதரவாளர்கள் இல்லாத மாணர்களுக்கு ஆதரவாளர்கள் கிடைக்கவும் ஜெபியுங்கள்.
* இந்த 2013 ஆம் ஆண்டிற்குள் சுமார் 7000 பீல் ஏழை ஆதிவாசி விசுவாசிகளுக்கு குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் வழங்கப்பட வேண்டும். இதற்கு ஒரு வேதாகமத்திற்கு ஆகும் செலவு ரூ. 100/– ஆகும். 7000 வேதாகமங்களுக்கான தேவைகள் சந்திக்கப்படவும், விசுவாசிகளுக்கு வேதத்தின் மூலம் ஒரு பெரிய ஆசீர்வாதத்தினைக் கட்டளையிடவும் ஜெபியுங்கள்.
* **பேராயர். தேவதாஸ்** மற்றும் அவர்கள் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களுக்காகவும் பிள்ளைகளுக்காகவும் விஷேசமாக ஜெபியுங்கள். தேவன் தாமே அவர்களுக்கு தமது ஞானத்தையும், கிருபைகளையும் தந்து ஊழியங்களை நடத்திச் செல்லவும், நல்ல சுகத்தையும், பெலத்தையும், பிரயாணங்களில் பாதுகாவலையும் தேவன் தந்து, விசேஷித்த அபிஷேகத்தின் வல்லமையால் நிரப்பவும் ஜெபியுங்கள். தேவன் பேராயர் குடும்பத்தை பீல் மக்களுக்கு மட்டுமன்றி தேசத்திற்கும் ஆசீர்வாதமாக பயன்படுத்த ஜெபியுங்கள்.
* தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம், சென்னை மற்றும் மார்த்தாண்டம் கிளை அலுவலகம் போன்ற அலுவலகங்களில் தேவனுடைய ஊழியத்தினை நிறைவேற்றி வரும் நமது சகோதர சகோதரிகளுக்காகவும், மேலும் ஊழியத்தில் தன்னார்வமாய் செயல்பட்டு காணிக்கைகளைச் சேகரித்து அனுப்பும் பிரதிநிதிகளுக்காகவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.
* வருகின்ற **நவம்பர் மாதம் 18 ஆம் தேதி முதல் 21 ஆம் தேதி வரை** குஜராத், ஆனந்த் பட்டணத்தில் நடைபெறவிருக்கும் நமது **பீல் சுதேச ஊழியர் குடும்ப முகாமிற்காக** ஜெபியுங்கள். இந்த முகாமில் ஊழியர்களின் பிரயாணம், தங்குமிடம், உணவு, அரங்கம், ஒலி, ஒளி அமைப்புகள், கால சூழ்நிலைகள் போன்றவற்றிற்காகவும், தேவ ஊழியர்களை தேவன் வல்லமையாகப் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

# U\YôUp ù_©UeLs!

# ஷாலோம் சுதேச ஊழியர்
# குடும்ப எழுப்புதல் தரிசன முகாம் - 2013

| இடம் | நாள் |
|---|---|
| BERACHAH SPIRITUAL CENTRE | *2013 நவம்பர்* |
| ஆனந்த், குஜராத் | *18 முதல் 21 வரை* |


பாடல் & ஆராதனை **Pr. டேனியல்,** மும்பை



வல்லமையின் செய்தி :

## சகோ. ஜட்சன் ஆபிரகாம்
## சகோதரி. பிரீத்தா ஜட்சன்

(Gift of Jesus Ministries, Warangal, Andhra)





## Pr. ரத்தினம் பால்

(துதியின் கோட்டை ஆலயம், திருநெல்வேலி)

## Rt. Rev. Dr. V. தேவதாஸ்

(பேராயர், ஷாலோம் திருமண்டலம்)



சகோதரி. **வஹிதா தேவதாஸ்**

(அன்பு பகிர்வு இயக்கம்)

**மற்றும் இயேசு விடுவிக்கிறார் குழுவினர்**



சுதேச ஊழியரின் சாட்சி

## போதகர். சாம்சன் டாமோர்

**வாங்கேல்,** குஜராத்



இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! எனது பெயர் சாம்சன் டமோர். நான் இயேசுவை அறியாததற்கு முன்பு எங்கள் முழு குடும்பமும் பிசாசின் பிடியினால் அவதிப்பட்டு சமாதானம் இல்லாமல் இருந்தோம். மந்திரவாதிகளை நாடி பூஜை செய்தும், பலி செலுத்தியும் விடுதலையில்லை. பின்பு ஜாலோத் பேய் பங்களாவில் சகோ. தேவதாஸ். சகோதரி. வஹிதா தேவதாஸ் நடத்தின வெள்ளிக்கிழமை கூட்டத்தில் பங்கு பெற்றபோது அங்கு கேட்ட பைபிள் செய்தியின் மூலமாக பிசாசின் பிடியிலிருந்து பூரண விடுதலை பெற்றோம். பின்பு தொடர்ந்து கூட்டத்தில் பங்கு பெற ஆரம்பித்தோம். **சகோ. *G.P.S.* ராபின்சன்** அவர்கள் குஜராத்திற்கு வந்த போது நடைபெற்றக் கூட்டத்தில் பங்கு பெற்றேன். அப்பொழுது பரிசுத்த ஆவியில் நிரப்பப்பட்டேன். 1992–இல் இயேசுவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேன். பின்பு போதகர் ***கன்னு பாபோர்*** அவர்கள் ஷாலோம் ஊழியத்தின் மூலமாக எங்கள் கிராமத்திற்கு ஊழியம் செய்ய அனுப்பப்பட்டிருந்தார். அவருக்கு உறுதுணையாக சபையில் மூப்பராக செயல்பட்டேன்.

இயேசுவுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சை வந்ததால் நான் ஷாலோமில் குறுகிய கால ஊழியப் பயிற்சியில் பயின்று என் சொந்த ஊரில் சபை ஊழியத்தை 1997–இல் செய்ய ஆரம்பித்தேன். இப்பொழுது வாங்கோல் சபையில் 62 விசுவாசக் குடும்பங்கள் இருக்கிறார்கள். மற்றும் மூன்று இடத்தில் கிளை சபைகள் ஆரம்பிக்கப்பட்டு ஊழியர்கள் எழுப்பப்பட்டுள்ளார்கள். பாவத்தில் வாழ்ந்த என்னைத் தேவன் அவருடைய பிள்ளையாக மாற்றியது மட்டுமல்லாமல் அவரின் ஊழியனாகவும் தெரிந்துக் கொண்டது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. எனக்காக ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். தேவனுக்கே மகிமை!

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **Rev. Dudley M. Thangaiah, New Life Ministries - Madurai.**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 500 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 600 க்கும் அதிகமான ஸ்தல சபைகளை உருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2000/– ஜெபித்து கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரத தேசம் எங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்திப் பணியாளரை அனுப்புவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!

## *இராஜஸ்தானிலுள்ள ஷாலோம் சபைகளின் மூப்பர்கள் கூடுகை செப்டம்பர் - 2013*

கர்த்தருடைய பெரிதான கிருபையால் 2013 செப்டம்பர் மாதம் 23, முதல் 26 வரை மற்றும் 30 ஆகிய தேதிகளில் 5 நாட்கள் இராஜஸ்தானில் உள்ள சுமார் 250 சபையின் மூப்பர்களுக்கான கூடுகை நடைபெற்றது. 23–ஆம் தேதி பான்ஸ்வாடா மாவட்டம் குசல்கட் தாலுகாவின் தென் பகுதியில் உள்ள சுமார் 56 சபைகளுக்கென்று நடைபெற்ற கூடுகையில் 350–க்கும் அதிகமான மூப்பர்களும், 24–ஆம் தேதியன்று குசல்கட் தாலுகாவின் கிழக்குப் பகுதியில் உள்ள சுமார் 54 சபைகளிலிருந்து 300–க்கும் மேற்பட்ட மூப்பர்களும் பங்கு பெற்றார்கள். இக்கூடுகை கோய்காவில் உள்ள ஷாலோம் ஆலயத்தில் நடைபெற்றது.

மேலும் 25–ஆம் தேதி இதே தாலுகாவின் மத்தியப் பகுதியிலுள்ள 52 சபைகளிலிருந்து சுமார் 250–க்கும் மேற்பட்ட மூப்பர்களும், 26–ஆம் தேதி பாகிதோரா தாலுகா மற்றும் குசல்கட் தாலுகாவின் மத்தியப் பகுதியில் உள்ள 55 சபைகளிலிருந்து சுமார் 250–க்கும் மேற்பட்ட மூப்பர்களும், 30–ஆம் தேதி பான்ஸ்வாடா தாலுகாவிலுள்ள சபைகள் மற்றும் பிரதாப்கட் மாவட்டம் அர்னோத் தாலுகாவில் உள்ள 33 சபைகளிலிருந்து 150–க்கும் அதிகமான மூப்பர்கள் பங்குப் பெற்றார்கள். இக்கூடுகைகள் யாவும் செவனியா கிராமத்திலுள்ள சி.என்.ஐ ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டங்களை **சகோ. கேரட்** அவர்கள் பொறுப்பாக நடத்தினார்கள்.

இக்கூட்டங்களில் சகோதரி.வஹிதா தேவதாஸ் மற்றும் **சகோ.ஃப்ராங்களின்** அவர்கள் சிறப்பு ஆராதனையை நடத்தினார்கள். அதன் பின் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் ஜெபத்தில் வழிநடத்தியதுடன், 1 நாளாகமம்–4:10–இல் இருந்து யாபேஸின் ஜெபத்தைக் குறித்தும் எல்லோராலும் தள்ளப்பட்டு, ஒதுக்கப்பட்ட நிலையிலிருந்து தேவன் எப்படித் தன்னை உயர்த்தினார் என்றும் தன்னுடைய அனுபவத்திலிருந்து செய்தியைப் பகிர்ந்து கொண்டது மூப்பர்கள் யாவருக்கும் ஆசீர்வாதமாக இருந்தது. அனைத்து மூப்பர்களும் யாபேஸின் ஜெபத்தைச் சொல்லி, யாபேஸ் வேண்டிக் கொண்டதையெல்லாம் கொடுத்த தேவன் தங்களுடைய ஜெபத்திற்கும் பதில் அளிப்பார் என்று மிகுந்த விசுவாசத்துடன் ஏற்றுக் கொண்டார்கள்.

கடைசியாக பிஷப் அவர்கள் மூப்பர்களுக்காக ஜெபித்த போது பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையால் அனைவரும் நிரப்பப்பட்டார்கள். மற்றும் தனித்தனியாக விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. வந்திருந்த அனைவரும் தேவ ஆசீர்வாதம் பெற்றார்கள். இப்படியாக கடந்த மாதத்தில் இராஜஸ்தானில் உள்ள ஷாலோம் சபைகளில் ஒரு சபைக்கு 5 மூப்பர்கள் வீதம் 250 சபைகளிலிருந்து சுமார் 1300 மூப்பர்களை சந்திக்கவும், அவர்களை ஆவியில் பெலப்படுத்தவும், சபைகளின் தூண்களாய் உருவாக்கவும் தேவன் கிருபை செய்தார். **தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

# ùNu\ CPùUpXôm ¡WôU BXVeLÞm, ¨Wm© Y¯Ùm Àp B§Yô£ ®ÑYô£LÞm

**சகோ. M. ஜான் ஜெயசிங், (நெல்லை)**

நான் எனது தாயார், மனைவி மற்றும் பிள்ளைகளுடன் குஜராத் பணித்தளங்களுக்குச் சென்று ஷாலோம் ஊழியத்தின் மூலமாய் பீல் ஆதிவாசி மக்களிடையே பேராயர். தேவதாஸ், **சகோதரி. வஹிதா தேவதாஸ்** மற்றும் குழுவினர் செய்யும் ஊழியங்களைக் காணச் சென்றோம்.

30–09–2013 அன்று குஜராத்தில் உள்ள பாரேவா என்ற கிராமத்தில் கட்டப்பட்டுள்ள ஷாலோம் ஆலயத்திற்குச் சென்றோம். அங்கு 65 குடும்பங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு மிகவும் ஆர்வமாய் ஆராதனை செய்கின்றனர். பின்னர் கொலானா கிராமத்திற்குச் சென்று அங்குள்ள மக்களைச் சந்தித்தோம். அங்குள்ள மக்கள் மிகவும் ஆர்வமாய் எங்களை வரவேற்று உபசரித்தனர். இந்தப் பகுதிகள் அனைத்தும் மிகவும் கரடுமுரடான பாதையாய் இருந்தது. ஷாலோம் மிஷனெரிகள் செய்யும் ஊழியம் மிகவும் வியப்புக்குரியதாய் இருந்தது.

01–10–2013 அன்று நாங்கள் தாகோத்தில் உள்ள நமது பயிற்சிக் கூடத்தில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் பயிற்சிப் பெற்ற மூத்த ஊழியக்காரிகளுக்கு நடத்தின உபவாச ஆராதனையில் கலந்து கொண்டோம். சுமார் 100–க்கும் அதிகமான ஊழியக்காரிகள் பங்கு பெற்று தேவனை உற்சாகமாய் ஆராதித்தார்கள். அவர்கள் ஆராதனை எங்கள் உள்ளத்தை மிகவும் அசைத்தது. குஜராத்திலுள்ள வரம்கேடா என்ற கிராமத்திற்குச் சென்றோம். கொள்ளை, திருட்டு என்பதே அவர்களது தொழிலாகும். அந்த மக்கள் மத்தியில் ஷாலோம் குழுவினர் சென்று ஊழியம் செய்து இயேசுவை அறிவித்துள்ளனர். பின்னர் வரம்கேடாவிலுள்ள இன்னொரு பகுதிக்குச் சென்றோம். அந்த சபையில் 70–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தேவனை ஆராதித்துக் கொண்டிருந்தார்கள். பின்பு இராஜஸ்தானிலுள்ள கொய்கா என்ற இடத்தில் அனைத்து ஊழியர்களும் கூடும்படியான வசதியுடன் கூடிய கட்டிடத்தைக் கட்டிக் கொண்டிருப்பதைப் பார்வையிட்டோம். அங்கிருந்து டெப்ரி என்ற கிராமத்தில் அமைந்துள்ள ஷாலோம் ஆலயத்திற்குச் சென்றோம். அங்கே 75 குடும்பங்கள் சபையில் அங்கத்தினராக இருக்கிறார்கள். இன்னும் அநேக இடங்களில் மக்கள் ஆலயமில்லாமல் வீடுகளிலே கூடி ஆராதித்து வருகிறார்கள். பின்னர் இராஜஸ்தானில் உள்ள பிஜல்பூர் என்ற இடத்திலுள்ள நமது ஷாலோம் மிஷன் சார்பாக கட்டப்பட்டு நடைபெற்று வரும் பள்ளிக்கூடத்தையும், விடுதியையும் பார்த்தோம். பீல் விசுவாசிகளின் பிள்ளைகள் மற்றும் ஊழியர்களின் பிள்ளைகளும் பயில்கின்ற இங்கே விடுதி வசதி இல்லாததால் பிள்ளைகளும் வகுப்பறைகளிலேயே தங்குகின்றனர்.

02–10–2013 அன்று நாங்கள் மத்தியப்பிரதேசத்திலுள்ள காளாக்கூட் என்ற இடத்திற்குச் சென்றோம். அங்கே மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் மக்கள் தேவனை ஆராதிக்கின்றனர். 50 குடும்பங்கள் அமர்ந்து ஆராதிக்கக் கூடிய இடத்தில் 150–க்கும் மேல் மக்கள் அமர்ந்து ஆராதிக்கின்றனர். பின் நாங்கள் காச்லா என்ற இடத்திற்குச் சென்றோம். அங்கேயும் மக்களின்

கூட்டம் ஆலயத்தின் உள்ளே முழுவதும் மட்டுமல்லாமல் வெளியேயும் நிரம்பி வழிந்தது. ஆவியில் நிறைந்து மக்கள் ஜெபித்தனர். அவர்களுடைய கலாச்சார முறைப்படி நடனமாடி தேவனைத் துதித்தனர்.

03–10–2013 அன்று நாங்கள் குஜராத்திலுள்ள கங்கேலா என்ற ஆலயத்திற்குச் சென்றோம். அதில் விசுவாசிகள் உள்ளேயும் வெளியேயும் கூடி தேவனை ஆராதித்துக் கொண்டிருந்தார்கள். ஜெரி என்ற இடத்திற்குச் சென்று நடைபெறுகிற Compassion Project –ஐ பார்வையிட்டோம். அதில் இயேசுவை அறியாத பிள்ளைகளும் பயனடைவதைப் பார்த்த போது மிகவும் சந்தோஷமாக இருந்தது.

பணித்தளத்தைப் பார்வையிட்டதில் இந்த ஆதிவாசி மக்கள் அடிப்படை வசதிகளே இல்லாமல் வாழ்கின்ற நிலையிலும், பல்வேறு எதிர்ப்புகளின் மத்தியிலும் ஷாலோம் மிஷனெரிகள் மிகவும் சிறப்பாய் ஊழியம் செய்து வருகிறார்கள். எங்கு பார்த்தாலும் விசுவாசிகளின் பெருக்கம் அதிகமாய் பெருகியிருக்கிறபடியாலும், கூடி ஆராதிப்பதற்குப் போதிய ஆலய வசதிகள் இல்லாததினாலும், இல்லங்களிலும், வெளியிலும் தேவனை ஆராதிக்கிறார்கள். ஆகையால் எல்லாக் கிராமங்களிலும் ஆலயம் கட்டிக்கொடுத்தால் மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கும். எனவே நாம் நம்மால் இயன்ற உதவியை மென்மேலும் செய்து பீல் மக்கள் தேவனை அறிந்து கொண்டு அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளவும் ஜெபிப்போம். முடிந்தால் ஒரு மிஷனெரியையோ அல்லது ஒரு ஆதிவாசிப் பிள்ளையையோ தாங்கி ஷாலோம் ஊழியத்தில் பங்கு பெற்று தேவனுடைய இராஜ்ஜியத்தைக் கட்டுவோமாக!

## BILD - T3 - புது ஊழியர்கள் மற்றும் மூப்பர்களுக்கான பயிற்சிகள்

நமது மூன்று மாநிலங்களிலும் உள்ள புதிய ஊழியர்கள் மற்றும் மூத்த மூப்பர்களுக்கென்று விசேஷ T3 பயிற்சி முகாம் கடந்த செப்டம்பர் மாதம் 12–ஆம் தேதியன்று மத்தியப்பிரதேசத்தில் 100 பேருக்கும், 16–ஆம் தேதி குஜராத்தில் 34 பேருக்கும், 17–ஆம் தேதியன்று இராஜஸ்தானில் 89 பேருக்கும் நடத்தப்பட்டது. இதில் மொத்தம் 223 பேர் பங்கு பெற்றுக் கொண்டனர். இந்தக் கூடுகையில் சுவிசேஷம் அறிவிப்பதன் முக்கியத்துவத்தை அறிந்து சபை எப்படி விரைவாக செயல்பட வேண்டும் என்று மூத்த ஊழியர்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது. குஜராத்தில் **சகோ. பாவ்சிங் கட்டாரா, போதகர். சுரேஷ் ஹட்டிலா** மற்றும் **போதகர். வில்சன் சங்காடா** ஆகியோர் பயிற்சியளித்தார்கள். மத்தியப்பிரதேசத்தில் **போதகர். பால் முனியா, போதகர். புர்சன் புரியா** மற்றும் **சகோ. பாவ்சிங் கட்டாரா** ஆகியோர் பயிற்சியளித்தார்கள். இராஜஸ்தானில் **சகோ. அனில் சௌகான், போதகர். விக்காஸ்** கராசியா மற்றும் **சகோ. பாவ்சிங் கட்டாரா** ஆகியோர் பயிற்சியளித்தார்கள்.

இக்கூடுகையில் பங்கு பெற்றோரை ஒவ்வொரு பயிற்சி வகுப்புகளுக்குப் பின்பு குழுவாகப் பிரித்து, கற்றுக் கொடுத்த பாடத்தைப் பற்றி ஒவ்வொருவரும் தெளிவாக புரிந்து கொள்ள வைத்தனர். இந்த பயிற்சிக்கு உதவியாக இருந்த Bless India / Vision 2020 ஸ்தாபனத்திற்கும், **திரு. எமில் ஜெபசிங்** அவர்களுக்கும் எங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் அற்புத ஊழியப்பணி

**சென்னை போதகர்களின் பணித்தள வருகை சிறப்பு அறிக்கை**

வட சென்னை போதகர் ஊழியர் நல ஐக்கியத்தின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். தேவனால் அழைக்கப்பட்டு தேவ தரிசனத்தைப் பெற்று பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் ஊழியம் செய்யும் **பேராயர். தேவதாஸ்** மற்றும் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களையும், ஷாலோம் பணித்தளங்களில் ஊழியம் செய்ய பல நாட்களாக ஜெபித்து ஆவியானவருடைய வழிநடத்துதலின்படி கடந்த 2013 அக்டோபர் 8,9,10 நாட்களில் மிஷனெரிப் பயணம் செய்யவும் பீல் மக்கள் மத்தியில் ஊழியங்களை நிறைவேற்றவும், அந்த 3 நாட்கள் ஊழியத்தின் பாதையில் ஆசீர்வாதமான ஊழிய அனுபவங்களைக் காணவும் தேவன் கிருபை செய்தார்.

நாங்கள் 4 போதகர்களும் 3 நாட்களில் 12 பணித்தளங்களில் உள்ள சபைகளைச் சந்தித்து ஊழியங்களை நிறைவேற்ற கர்த்தர் கிருபைச் செய்தார். **பாஸ்டர். மோசஸ் ஜெபராஜ்** அவர்கள் மத்தியப்பிரதேசத்தில் ஜாவோ மாவட்டத்தில் காலாகேட் கிராமத்தில் உள்ள சபையில் ஷாலோம் மூப்பர் விசுவாசிகளுக்கான சிறப்புச் செய்தியைக் கொடுத்தார்கள். இதில் 400 பேர் கலந்து கொண்டார்கள். குஜராத் மாநிலத்தில் கங்கேலா கிராம சபையில் 500 பேர் கலந்து கொண்ட சபையில் தேவசெய்தி கொடுத்தார்கள். இராஜஸ்தானில் மிக அதிக மழை காரணமாக ஊழியப்பார்வை தடைப்பட்டாலும் கோய்க்கா சபையாரை சந்திக்க தேவன் கிருபை செய்தார்.

பாஸ்டர். அற்புத சீயோன் அவர்கள் மத்தியப்பிரதேசத்தில் ஜாம்புகேடா கிராம சபையில் தேவ செய்தி கொடுத்தார்கள். இதில் 400 பேர் கலந்து கொண்டார்கள். குஜராத்தில் வரம்கேடா கிராம சபையில் 350 பேர்கள் கலந்து கொண்டார்கள். இங்கேயும் **பாஸ்டர். அற்புத சீயோன்** அவர்கள் தேவசெய்திக் கொடுத்தார். இராஜஸ்தானில் மழை காரணமாக ஊழியப்பார்வை தடைப்பட்டாலும் கோய்க்கா, கும்புரா கிராம சபையில் தேவச் செய்தியளித்தார்கள். **பாஸ்டர். ஜான்** அவர்கள் மத்தியப்பிரதேசத்தில் பாடல்வா கிராம ஆலயம் சென்றபோது விசுவாசிகள் நிரம்பி வழியத்தக்கதாக இருந்தனர். குஜராத்தில் பாலைவா கிராம சபையில் 150 பேர் கலந்து கொண்டார்கள். இராஜஸ்தானில் தெபிரி பகுதியில் ஒழுங்கு செய்யப்பட்ட சிறப்புக் கூட்டத்தில் பங்குப் பெற்று தேவசெய்தி கொடுத்தார்கள். இதில் 400 பேர் கலந்துக் கொண்டார்கள். **பாஸ்டர். ஜான் வெஸ்லி** மத்தியப்பிரதேசத்தில் அந்தர்வேலியா கிராம சபையில் செய்தி கொடுத்தார். விசுவாச பிள்ளைகள் 300க்கும் அதிகமாக கலந்து கொண்டார்கள். குஜராத்தில் மெகந்திகேடாவில் உள்ள சபையில் தேவ மக்கள் நிரம்பி வழிந்தனர். இராஜஸ்தானில் உள்ள தார்கா கிராம சபையிலும் மக்கள் நிரம்பி வழிந்து தேவாசீர்வாதம் பெற்றனர்.

நாங்கள் 12 பணித்தளத்தில் ஊழியம் செய்தாலும் பல பணிதளங்களைக் காணவும் அங்குள்ள சுதேச ஊழியர், மூப்பரின் சாட்சிகளைக் கேட்டறிந்து தேவனை மகிமைப்படுத்தினோம். குறிப்பாக மத்தியப்பிரதேசத்தில் உள்ள குவாலி, வச்சரா, நவாப்பாடா, மாங்கிலின், குருப்பாகேடா, மெகந்திகேடா ஆகிய பணித்தளங்களைக் காணும்படி தேவன் கிருபைச் செய்தார். இந்தப் பகுதியில் பல கிராமங்களுக்கு போக்குவரத்து வசதியில்லாமல் மக்கள் நடந்து போவதைக்

கண்டு வேதனைப்பட்டோம். நதிகள் குன்றுகளைக் கடந்து பணித்தளத்தைப் பார்வையிட்டோம். குஜராத்தில் தெல்சர், வரம்கேடா, பாரியா பகுதி, வாக்கோல், துலானா, சிமலியா, போர்டி, தனுசியா, ஜெரி, ஹிரோலா ஆகிய பணித்தள சபைகளைக் காண தேவன் கிருபைச் செய்தார். ஒவ்வொரு கிராம சபையும் அற்புத சாட்சியாக உருவாக்கப்பட்டதை நினைத்து தேவனைத் துதிக்கிறோம்.

பணித்தளத்திற்குப் போகும் வழியில் குஜராத்தில் ஷாலோம் ஊழியம் ஆரம்பிக்கப்பட்ட ஜாலோத் பணித்தளத்தில் 22 வருடத்திற்கு முன்பாக **சகோ. தேவதாஸ்** அவர்களின் குடும்பம் தங்கி ஊழியம் செய்தப் பேய் பங்களாவைப் பார்வையிட்டோம். மேலும் இராஜஸ்தானில் கும்புரா, கிராம ஆலயத்தையும் கோய்க்கா கிராமத்தில் ரூ. 25,00,000 செலவில் கட்டப்பட்டு வரும் பேராலயத்தையும் காண தேவன் கிருபைச் செய்தார். இராஜஸ்தானில் பிஜல்பூர் கிராமத்தில் 1 முதல் 8 வரை உள்ள ஷாலோம் பள்ளி மற்றும் விடுதிகளைக் காணும்படி தேவன் உதவிச் செய்தார். அங்கு சுமார் 300 மாணவர்கள் ஆசீர்வாதத்துடன் கல்விப் பயின்று வருகிறார்கள். விடுதி வசதி மிகவும் குறைவாக இருந்தாலும் சந்தோஷத்துடன் படித்து வருகிறார்கள். ஷாலோம் ஊழியம் மூலம் பீல் ஆதிவாசி மாணவர் சுமார் 1700 பேர் கல்வி பெற்று வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நாமும் ஆதிவாசி மாணவரை ரூ. 600 கொடுத்துத் தாங்க முன் வருவோம். சுமார் 200 மாணவர் 10, 12–ஆம் வகுப்புகளிலும் இன்னும் சிலர் உயர்கல்வியும் பெற்று வருவதைக் கண்டு ஆச்சரியப்பட்டோம். மேலும் குஜராத்தில் உள்ள ஷாலோம் பணித்தள அலுவலகத்தையும் ஷாலோம் சேரிட்டி மிஷன் சமூகப் பணியையும் ஷாலோம் திருமண்டல சபைப் பணிகளைக் (ஷாலோம் டயோசிஸ்) கண்டு தேவனுக்கு நன்றி கூறினோம். அலுவலகத்திலும் பணித்தள Project -ல் பணியாற்றும் சுமார் 80 ஊழியர்கள் உண்மையாக ஊழியம் செய்து வருகிறார்கள். பேராயரின் தரிசனத்தோடு இவர்கள் ஊழியம் செய்வதைக் கண்டு தேவனைத் துதிக்கிறோம். மூன்று நாட்களில் நாங்கள் 4 போதகரும் சுமார் 400 கிலோமீட்டர் பரப்பளவில் பிரயாணம் செய்து பார்வையிடத் தேவன் கிருபைச் செய்தார். இந்த மிஷனெரிப் பணித்தள ஊழியத்தை நிறைவேற்றும் **பேராயர். தேவதாஸ்** குடும்பத்தினர் மிக நேர்த்தியாக உணவு, உடை, உறைவிடம் மற்றும் பிரயாணங்களில் மொழிப்பெயர்ப்பு போன்றவைகளை நேர்த்தியாகச் செய்தது மிகவும் பாராட்டத்தக்கது.

**பணித்தளத்தில் நாங்கள் அறிந்த சில காரியங்கள்**

* மிகவும் ஏழை எளிய மக்களான பீல் மக்கள் ஏராளமானோர் சாராயம் காய்ச்சியும் மந்திரப் பூஜை பில்லி சூனியம் செய்து வந்தவர்கள். இவர்கள் மத்தியில் பணி செய்வது சாதாரணம் இல்லை. மெய்யாகவே **பேராயர். தேவதாஸ்** குடும்பத்திற்கு அப்போ : 9:15, 26:19 ஆகிய வசனங்களின்படி தேவன் கொடுத்த பரம தரிசனமாகும்.
* பீல் ஆதிவாசி மக்கள் மீது இயேசு கிறிஸ்துவின் அன்பு ஊற்றப்பட்டதையும் கல்வி அறிவு இல்லாத இவர்கள் பாவ மன்னிப்பைப் பெற்று சாபங்கள், நோயிலிருந்து விடுதலை பெற்று இயேசுவை ஏற்றுக் கொண்டு பல மணி நேரம் ஆராதிப்பதையும் கண்டு ஆச்சரியப்பட்டோம்.
* நாங்கள் ஊழியம் செய்த ஒவ்வொரு சபையிலும் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டிருப்பதையும் கண்டோம். ஒவ்வொரு கூட்டங்களிலும் சுகத்தையும் பிசாசின் கட்டிலிருந்து விடுதலையையும் (சிறு குழந்தையைப் போல்) விசுவாசத்துடன் பெற்றுக் கொண்டு சாட்சி கூறித் தேவனை மகிமைப்படுத்துகிறார்கள்.

* ஷாலோம் சுதேச ஊழியர்கள் உண்மையான உள்ளத்தோடு தேவன் கொடுத்த பரம தரிசனத்திற்கு நேராகத் தங்களை இணைத்து சொந்த பீல் ஆதிவாசி ஜனங்கள் இரட்சிக்கப்படவும் 7000 கிராமங்களில் சபை உருவாக்கப்படவும் **பேராயர். தேவதாஸ்** அவர்களுடன் இணைந்து ஊழியம் செய்கிறார்கள்.

**பீல் மக்கள் மத்தியில் தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டுவதில் உங்கள் பங்கு :**

இதை வாசிக்கும் சபைப் போதகர்கள், ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளாகிய நாம் என்ன செய்ய வேண்டும். நம்முடைய பாரத தேசத்தில் தேவன் தந்த திறந்த வாசலையும் பலத்த அறுவடையையும் பீல் மக்கள் மத்தியில் காண்பதற்குப் பணித்தளத்தைப் பார்வையிடச் சொல்லுங்கள். சபையாக குடும்பமாக பீல் மக்களுக்காகவும் அவர்கள் மத்தியில் ஷாலோம் ஊழியர் மற்றும் தேவதாஸ் குடும்பத்திற்காக ஜெபியுங்கள்.

அப்போஸ்தலன் பவுல் சொன்னது போல் ஆத்துமாக்களுக்காக செலவு பண்ணப்படவும் என்ற பவுலின் வார்த்தையின்படி சுதேச ஊழியர் ஆதிவாசி மாணவரைத் தாங்கவும் அநேக ஆலயங்களைக் கட்டிக் கொடுக்கவும். உங்களால் முடிந்த அளவுக்கு உதவ முன் வரும்படி அழைக்கிறோம். எங்களுடைய மிஷனெரிப் பணித்தள அனுபவத்திற்காக தேவனை துதிக்கிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**பாஸ்டர். மோசஸ்ஜெபராஜ்,**
இம்மானுவேல் ஜெபவீடு,
புது வண்ணார்போட்டை, சென்னை.
**பாஸ்டர். அற்புதசீயோன்,**
நித்திய வாழ்வு சபை, திருவற்றியூர்.

**பாஸ்டர். ஜாண்வெஸ்லி,**
மாரநாதா சபை. திருவற்றியூர்.
**பாஸ்டர். ஜாண்ஸ்மாக்கர்**
ராஜாதி ராஜா சபை, திருவற்றியூர்.

*ஜெபியுங்கள்!* *பங்கு பெறுங்கள்!*

# வாக்குத்தத்த ஆசீர்வாத ஜெபக் கூடுகை

நாள் : **01.11.2013 (வெள்ளி)**

நேரம் : **காலை 9.30 மணி முதல்**
மதியம் **1.00 மணி வரை**

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம், தலைமை அலுவலகம்**
5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 628 008.

தேவ செய்தி : **Prof. C.S. கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

**ஊழியப் பகிர்வு**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுவதாக. கடந்த செப்டம்பர் 2013 இல் 15, 22, 29 ஆகிய தேதிகளில் மார்த்தாண்டத்திலுள்ள நிலவாணி, மாலைக்கோடு HMS ஆலயம், சீனி விளையிலுள்ள கெத்சமெனா ஜெபவீடு மற்றும் பால்குளம் C.S.I தேவாலயம் போன்ற சபைகளில் ஞாயிறு ஆராதனைகளில் கலந்து கொண்டு நம் ஷாலோம் ஊழியங்களைப் பற்றி **சகோ. செல்வதுரை** அவர்கள் பகிர்ந்து கொண்டதோடு தேவ செய்தியளித்தார்கள்.

நிலவாணி ஆலய போதகர் **Rev. லிவின்ஸ் செல்லம்,** சீனி விளை கெத்சமெனா ஜெபவீடு சபைப்போதகர் **Pastor . T. சந்தனராஜ்,** மற்றும் பால்குளம் C.S.I சபை ஆயர் **Rev. சாம்பீட்டர்** போன்றோர்களை கர்த்தர் அதிகமாய் ஆசீர்வதிப்பாராக.

# Pr. மோசஸ் ஜெபராஜ் குழுவினரின் பணித்தள வருகை


காளகேத், கிராம சபையில் கலாச்சார வரவேற்பு (ம.பி.)


காளகேத், கிராம சபையில் செய்திவேளை (ம.பி.)


காளகேத், சபை முன்பு விசுவாகள் மற்றும் பிஷப் தேவதாஸ் அவர்களுடன் (ம.பி.)


ஜாம்புகேடா, சபையில் ஜெப வேளையில் (ம.பி.)


டெப்ரி, கிராம கூடுகையில் செய்தியளிப்பு (இராஜ்.)


டெப்ரி, கிராம கூடுகையில் கலந்து கொண்ட தேவ ஜனங்கள் (இராஜ்.)


ஷாலோம் பணித்தள அலுவலக காலை தியானத்தில்


அந்தர்வேலியா, கிராம சபையில், செய்திவேளையில் (ம.பி.)

# ஷாலோம் மிஷன் ஞாயிறு – 2013



அமலிப்பட்டார் கிராம சபையில் (ம.பி.)



பாட்டன்புரா கிராம சபையில் (குஜராத்)



போர்கேடா கிராம சபையில் (குஜராத்)



தேதலா கிராம சபையில் (ம.பி.)



கங்கேலா கிராம சபையில் (குஜராத்)



ஒஸ்கா கிராம சபையில் (ம.பி.)



பிட்டோல் கிராம சபையில் (ம.பி.)



சிமளியா கிராம சபையில் (குஜராத்)

## BILD - T3 – புது ஊழியர்கள் மற்றும் மூப்பர்களுக்கான பயிற்சிகள்


பயிற்சி வேளை


குழு கலந்தாய்வு வேளை




பயிற்சி பெற வந்திருந்த நமது புது ஊழியர்கள் மற்றும் மூப்பர்கள்

## சகோ. ஜாண் ஜெயசிங் (நெல்லை) அவர்கள் குடும்பத்தாரின் பணித்தள வருகை


கலாச்சார வரவேற்பு


கேடி, ம.பி. கிராம சபையில் செய்தியளிப்பு




பெண்கள் கூடுகையில் வாழ்த்துரை


நமது பிஜல்பூர் விடுதி மாணவர்களுடன்

# ஷாலோம் வாலிபர் முகாம் – 2013




பாடல் மற்றும் ஆராதனை வேளை




அபிநயப் பாடல் (Choreography)




வாலிபர்களுக்கான சிறப்பு செய்தியளிக்கும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்



வாலிபர்களை ஜெபித்து ஆசீர்வதிக்கும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்





திரளாய் கலந்து கொண்ட வாலிபர்கள்

# CDC - மாணவ மாணவிகளுக்கான சிறப்புப் பயிற்சி – 2013



பயிற்சியளிக்கும் சகோ. டைட்டஸ் அவர்கள்



கலந்து கொண்ட மாணவ மாணவியர்

# ஷாலோம்
# வாலிபர் முகாம் – 2013

**“கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கத்தரிசனம் சொல்லுவார்கள். உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்.”** – என்ற வார்த்தை பீல் ஆதிவாசி வாலிபர்கள் மத்தியில் நிறைவேறி வருகிறதைக் கண்டு தேவனைத் துதிக்கிறோம்.

கர்த்தருடைய பெரிதான கிருபையால் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களிலுள்ள ஷாலோம் சபையின் வாலிபர்களுக்கென்று கடந்த மாதம் விசேஷித்த முகாம்கள் வாலிபர்களுக்கும், வாலிபப்பெண்களுக்கும் தனித்தனியே நடைபெற்றது. 14 ஆம் தேதி நடைபெற்ற குஜராத் வாலிபர் முகாமில் சுமார் 300 வாலிபர்களும் , 15 ஆம் தேதி வாலிபப் பெண்கள் முகாமில் சுமார் 320 வாலிபப் பெண்களும் பங்கு பெற்றார்கள். 21 ஆம் தேதி மத்தியப்பிரதேசத்திலுள்ள வாலிபர்களுக்கென்று நடைபெற்ற முகாமில் 300 வாலிபர்களும், 22 ஆம் தேதி நடைபெற்ற வாலிபப் பெண்கள் முகாமில் 350 வாலிபப் பெண்களும் பங்கு பெற்றார்கள்.

இந்த முகாம்கள் யாவும் தாகோத்திலுள்ள சி.என்.ஐ ஹாலில் வைத்து நடைபெற்றது. 28 ஆம் தேதி இராஜஸ்தானிலுள்ள வாலிபர்களுக்கென்று நடைபெற்ற முகாமில் 150 வாலிபர்களும், 29 ஆம் தேதி வாலிபப் பெண்களுக்கென்று நடைபெற்ற முகாமில் 150 வாலிபப் பெண்களும் பங்கு பெற்றார்கள். இம்முகாம்கள் இராஜஸ்தானில் உள்ள செவனியா ஆலயத்தில் நடைபெற்றது. கடந்த மாதம் 6 இடங்களில் நடைபெற்ற வாலிபர் முகாம்களில் சுமார் 1600 வாலிபர்கள் பங்கு பெற்று, தேவனுக்கென்று வாழ தங்களை ஒப்புக்கொடுத்து, ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டார்கள்.

எனது எதிர்காலம் இயேசுவுக்கே என்ற தலைப்பின்கீழ் இம்முகாம்கள் நடைபெற்றது. இம்முகாம்களை **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் பொறுப்பாக நடத்தினார்கள். பாடல், ஆராதனை மற்றும் அபிநயப் பாடல்களை **சகோ. ஃப்ராங்களின்** அவர்கள் நடத்தினார்கள். ஆராதனை வேளையில் வாலிபர்கள் மிகவும் ஆடிப்பாடி தேவனை உற்சாகமாய் துதித்துப் பரவசமடைந்தார்கள். மேலும் திரும்பி வா தூரம் போகாதே என்ற பாடலுக்கு கோரியோகிராஃப் நடத்தப்பட்டது. இந்த கோரியோகிராஃப் மூலம் வாலிபர்கள் தொடப்பட்டு இயேசுவோடு வாழ தீர்மானித்தார்கள். **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் எனது எதிர்காலம் இயேசுவுக்கே என்ற தலைப்பில் தானியேலின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு தேவ செய்தியைப் பகிர்ந்து கொண்டார்கள்.

ஜெப வேளையில் வாலிபர்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு தேவனோடு வாழ தங்களை அர்ப்பணித்தார்கள். கட்டுக்கள் உடைக்கப்பட்டு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். அநேக வாலிபர்கள் பரிசுத்த ஆவியால் நிரம்பி தரிசனங்களில் இயேசுவைக் கண்டதை சாட்சியாகக் கூறினார்கள். கடைசியில் ஷாலோம் Training Unit யோசேப்பின் வாழ்க்கை வரலாற்றில் அவன் எடுத்த தீர்மானத்தின்படியே தேவன் அவனை உயர்த்தின விதத்தை நாடகமாக நடித்துக் காண்பித்தார்கள். பின்பு வாலிபர் முகாம் ஜெபத்துடன்

நிறைவடைந்தது. கூட்டத்தின் இறுதியில் வாலிபர்கள் முகாமில் பெற்ற ஆசீர்வாதத்தை சாட்சியாக பகிர்ந்து கொண்டார்கள். கலந்துகொண்ட அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.

**அவர்கள் பகிர்ந்து கொண்ட சாட்சிகளில் சிலவற்றை மிகவும் சுருக்கமாக தேவ நாம மகிமைக்காக கீழே வெளியிடுகிறோம்.**

- செய்தியின் மூலம் ஆசீர்வாதம் பெற்றேன். (ஆஷா புரியா, பிட்டோல்)
- பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றேன். (ரவீனா ஹட்டிலா,ம.பி)
- சுகம் மற்றும் சந்தோஷம் கிடைத்தது. (ரீனா டாமோர், சஜேலி)
- இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேன். (ஹீரா புரியா , அந்தர்வேலியா)
- இரட்சிப்பின் அனுபவம் கிடைத்தது. (பாபுடி கர்வால், சந்த்லாயி)
- பாவ மன்னிப்பைப் பெற்றேன். (சுர்த்தா, சாகுவானி)
- என் நாமத்தினாலே எதைக் கேட்டாலும் அதை நான் தருவேன் என்று இயேசு என்னோடு பேசினார். (ரெபேக்கா பாரியா)
- கோப சுபாவத்தை மாற்றி, கர்த்தர் சரியான வழியை எனக்குக் காண்பித்தார். (ஆஷா, மேக்நகர்)
- கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதற்கு ஒப்புக்கொடுத்தேன். (மன்னு மெய்டா, அந்தர்வேலியா)
- சினிமா பாடல்களைப் பாடவும் கேட்கவும் கூடாதென்று தீர்மானம் எடுத்தேன். (லீலா முனியா, மீரா புரியா– அந்தர்வேலியா)
- பரிசுத்த ஆவியின் வரங்களால் தேவன் என்னை நிரப்பி தேவச் செய்தியின் மூலம் ஊழியம் செய்ய வேண்டும் என்ற பாரம் தந்தார். (மரியா புரியா, பிட்டோல்)
- இயேசு எனது இதயத்தில் வந்தார். (கமலேஷ் புரியா, ஜாராடாபர்)
- பாவத்திலிருந்து விடுதலை பெற்றேன் (கசு)
- ஊழியம் செய்யத் தேவையான வல்லமையையும் பெலனையும் பரிசுத்த ஆவியானவர் தந்தார். (லல்லு தேவ்தா, சோக்வாடா)
- தேவனிடத்திலிருந்து வல்லமை மற்றும் ஞானம் போன்றவற்றைப் பெற்றேன். (ரமேஷ் டாமோர், தேவ்கா)
- ஊழியம் செய்ய வேண்டும் என்ற பாரம் தந்தார். (கைலாஷ் புரியா, தேவ்கா)
- பெருங்காற்று போல பரிசுத்த ஆவியானவர் என் மீது இறங்கினார். (முனியா பில்வாள், கேடி)
- பரிசுத்த ஆவியானவர் தண்ணீர் ஊற்றப்படுவது போல் என் மீது ஊற்றப்பட்ட அனுபவத்தைப் பெற்றேன். (மனோஜ் சிங்காடா, நெகடியா)
- சூரிய பிரகாசத்தைப் போல என் மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். (பூனம்சிங் பபேரியா, வாவடி)
- அக்கினியைப் போல பரிசுத்த ஆவியானவர் என் மீது இறங்கினார். (சத்ரசிங் புரியா, ஒஸ்கா)
- ஊழியத்திற்கென்று என் வாழ்க்கையை அர்ப்பணித்தேன். (ராஜேஷ் புரியா, கோசல்யா)

- நான் கண்ட தரிசனத்தில் நான் தனியாக நின்று கொண்டிருந்த வேளையில் என் அருகில் இயேசு வந்து என்னோடு பேசினார். (சோபான்சிங் முனியா, கச்சல்தாரா)
- எனது பெற்றோர் அவிசுவாசிகள். நான் இயேசுவை விசுவாசிப்பதால் எனது பெற்றோர் எப்போதும் எனக்கு எதிராகவே பேசுவார்கள். நான் மிகவும் தனிமையை உணர்ந்தேன். ஆனால் இன்று என்னுடைய வாழ்க்கை மாறியது. இயேசுவை எனது நண்பனாக ஏற்றுக் கொண்டேன். இயேசு தம்முடைய வார்த்தையின் மூலம் "எனது மகளே நீ தனிமையாக இல்லை. நான் உன்னோடு கூட எப்போதும் இருக்கிறேன்" என்று என்னோடு பேசினார். (நிர்மலா மெய்டா, குஜர்பாடா)

பெயர் : **காலு பாரியா,** தெல்சர், குஜராத்



நான் கடைசி ஜெப வேளையில் ஜெபிப்பதற்காக வரிசையில் நின்று கொண்டிருந்தேன். அப்போது மற்றவர்களுக்கு ஜெபிக்கும் போது தலை மீது கை வைத்தவுடனே சிலர் கீழே விழுந்தார்கள். அதைப் பார்த்த நான் எல்லோரும் சும்மா விழுகிறார்கள் என்று நினைத்தேன். ஆனால் சகோதரி என் மீது கைகளை வைத்த போது பரிசுத்த ஆவியானவர் வல்லமையாய் இறங்கினார். என்னால் நிற்க முடியாமல் கீழே விழுந்து கிடந்தேன். இப்படியாக பரிசுத்த ஆவியானவர் என் மீது பலமாய் இறங்கினார். தேவனுக்கே மகிமை!



பெயர் : **தும்சிங் புரியா,** ஒஸ்கா, மத்தியப்பிரதேசம்

ஊழியர் என் மீது கைகளை வைத்து ஜெபிக்கும் போது என் சரீரம் முழுவதும் பரிசுத்த ஆவியானவரின் அக்கினியால் நிரப்பப்பட்டேன். அப்போது "நான் உன்னை நிச்சயமாக உயர்த்துவேன்" என்று இயேசு என்னோடு பேசிய சத்தத்தைக் கேட்டேன்.

பெயர் : **சாரதா பபேரியா,** வாவடி, மத்தியப்பிரதேசம்

நான் இந்த உலகத்தில் எனக்கு யாருமில்லை ஆகையால் தற்கொலை செய்து விடலாம் என்று நினைத்திருந்தேன். மட்டுமல்ல அசுத்த நினைவுகளால் என் மனம் நிறைந்திருந்தது. ஆகையால் கடந்த 1 மாதமாக சபைக்குப் போக மனமில்லாமல் நின்று விட்டேன். இந்த வாலிபர் முகாமிற்கும் நான் செல்ல இஷ்டமில்லாமல்தான் வந்தேன். கூட்டத்தின் நடுவில் எழும்பிப் போய் விடலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் ஆராதனை வேளையில் நான் தொடப்பட்டேன். அதைத் தொடர்ந்து "**திரும்பி வா தூரம் போகாதே நீ**" என்ற Choreography –ஐ பார்த்தபோது என் மனக்கவலை எல்லாம் மாறியது. **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் அளித்த செய்தி எனக்கு ஆசீர்வாதமாக இருந்தது. கடைசி ஜெப வேளையில் பரிசுத்த ஆவியானவர் மிகவும் வல்லமையாய் என் மீது இறங்கினார். அசுத்த எண்ணங்கள் மற்றும் தற்கொலை எண்ணம் எல்லாம் என்னை விட்டு மாறியது. தேவனுக்கே மகிமை!



பெயர் : **தாவூத் கட்டாரா,** ஜாஞ்சர்வாக்கலா, இராஜஸ்தான்



நான் எத்தனையோ முறை பரிசுத்த ஆவியானவரைப் பெற வேண்டுமென்று ஜெபம் செய்திருக்கிறேன். எங்கு கூட்டங்கள் நடந்தாலும் அங்கு சென்று அபிஷேகத்திற்காக ஜெபித்திருக்கிறேன். ஆனால் இந்த முகாமிற்கு நான் வருவதற்கு வீட்டிலிருந்து புறப்படும் முன் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுதான் வீடு திரும்ப வேண்டும் என்ற தீர்மானத்தோடு வைராக்கியத்துடன் புறப்பட்டுவந்து, விசுவாசத்துடன் ஜெபித்தேன். கடைசி ஜெப வேளையின் போது என் மீது பரிசுத்த ஆவியானவர் வல்லமையாக இறங்கியது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

# ஞாபகப்படுத்துகிறோம்



***அன்பான உண்டியல் ஆதரவாளர்களுக்கு,***

அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! கிறிஸ்துமஸ் பண்டிகை தினத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நாம், வரப்போகின்ற கிறிஸ்துமஸைக் கொண்டாட ஜெபித்து இப்பொழுதே ஆயத்தப்படுவது நமது கடமையாகும். மேலும் நமது பணித்தளங்களில் நாம் தாங்கி வரும் பீல் ஆதிவாசி விசுவாசிகள் மற்றும் சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் நன்றாகப் படித்தும், ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்தும் வருகிறார்கள்.

பீல் ஆதிவாசி சிறுவர்களின் கல்வி மற்றும் கிறிஸ்துமஸ் நாளுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற வாஞ்சையோடு, நீங்கள் எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் அந்த ஆதிவாசிப் பிள்ளைகளுக்கென காணிக்கைகளை சேகரித்து வைத்திருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம். இந்தக் காணிக்கையை ஆதிவாசிப் பிள்ளைகளின் கிறிஸ்துமஸ் தேவைகளுக்காகக் கொடுப்பீர்கள் என்று நம்புகிறோம்.

அதோடு பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகக் கொடுக்கலாம். அல்லது எங்களது தலைமை அலுவலகத்திற்கு நேரில் வந்தும் கொடுக்கலாம். அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O / D.D / Cheque** மூலமாக **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறோம். நீங்கள் உண்டியலைத் திறக்க உங்களுக்கு சாவி **(Key)** வேண்டுமானால் **9345675468** என்ற செல் நம்பருக்குத் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

**cDc UôQY - UôQ®LÞdLô] £\l×l T«t£**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நமது ஊழியத்தின் மூலம் பயன் பெற்று வரும் Compassion Project மாணவ மாணவிகளுக்கு Career Guidance என்ற தலைப்பில் அக்டோபர் 2–ஆம் தேதி பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது. இந்த பயிற்சியில் ஹிரோலாவிலிருந்து 60, ஜெரியிலிருந்து 56, அந்தர்வேலியாவிலிருந்து 77 மாணவ, மாணவிகளும் மற்றும் ஆசிரியர்களும் சேர்ந்து மொத்தம் 215 பேர்கள் பங்கு பெற்றார்கள். இந்தப் பயிற்சியை 3 Project Directors, Co-Ordinators –களும் ஒழுங்கு செய்து நடத்தினார்கள். விசேஷமாக இந்தப் பயிற்சி வகுப்புகளை நடத்தும்படியாக பரோடாவிலிருந்து Alpha Church மூலமாக **Prof. George Kurien** மற்றும் 9 பேர் கொண்ட குழுவாக வந்து பயிற்சி அளித்தார்கள். இந்த Training programme அனைத்தும் Shalom Charity Mission Director **Bro.Gladson Titus** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.


இதில் Learning Skills என்ற தலைப்பில் எப்படி பலவிதமான பாடங்களைப் படிக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார்கள். மற்றும் முதலுதவி எப்படிச் செய்ய வேண்டும் என்றும், மாணவ மாணவிகளின் கவனிக்கும் திறன் மற்றும் ஞானத்தின் (Observation Power & Memory) திறனை அறியும் நோக்குடன் பயிற்சி அளிக்கப்பட்டது. வேலை வாய்ப்புகள் எந்த வகையில் உள்ளது என்ற ஆலோசனைகளும் பயிற்சியில் விவரித்துக் கூறப்பட்டது.

ஆவிக்குரிய வாழ்க்கையில் எப்படி இரட்சிப்பைக் காத்து நடக்க வேண்டும் என்பதையும் சில சாட்சிகள் மூலம் விளக்கினார்கள். அவற்றோடு மாணவ மாணவிகளுக்கு பாடல்கள், வசனங்கள் மற்றும் தானியேலின் வாழ்க்கை வரலாற்றைப் போதித்து, இவரைப் போல நாமும் எப்படி நிர்ணயிப்பது, என்றும் வெற்றி அடைவதின் இரகசியம் என்ன என்பது பற்றியும் கற்றுக் கொடுத்து, **“என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு”** என்ற வார்த்தையைக் கொண்டு பயிற்சியை நிறைவேற்றினார்கள். அனைத்து மாணவ, மாணவிகளும் பயிற்சிப் பெற்று மிகவும் உற்சாகமடைந்தார்கள்.

மேலும் 05–10–13 அன்று மத்தியப்பிரதேசம் அந்தர்வேலியா C.D.C மாணவ, மாணவிகளுக்கு, **சகோ. டைட்டஸ் & சகோதரி. மெர்லின் டைட்டஸ்** இருவரும் சேர்ந்து Career Building Programme ஐ நடத்தினார்கள். இதில் Team Work, Grasping Power, Concentration Power, Memory Power, Listening Power போன்றவைகளை எப்படி விருத்தி அடையச் செய்வது என்பது பற்றி பல்வேறு விளையாட்டுகளின்(Games) மூலமாக நடத்தி பிள்ளைகளுக்கு அறிவை விளக்கினார்கள். இதை **சகோ.ஜெயராஜ்** அவர்கள் பொறுப்பேற்று நடத்தினார்கள். தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

**`ôúXôm 24 U¦ úSW Ne¡-j ùRôPo ù_Tm**

நாள் : **16.11.2013 (சனிக்கிழமை)**



நேரம் : **அதிகாலை 12.00 மணி முதல் மறுநாள் நள்ளிரவு 12.00 மணி வரை (24 மணிநேரம்)**

**நீங்களும் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஏதாவது ஒரு மணிநேரம் ஜெபிக்க விரும்பினால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்புகிறோம்.**

# பணித்தளங்களில் தேவ அற்புதங்கள்!

## குஜராத் மாநிலம்

**Pr. சாகன் H. காமோல்** **வாங்கட்**

ரூப்லிபேன் என்ற சகோதரிக்கு 3 வருடங்களாக கைகாலில் வீக்கம் ஏற்பட்டு வேதனையில் பாதிக்கப்பட்ட நேரத்தில் இவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. சந்து R. டாமோர்** **ஹடுமத்கூட்டா**

சேவ்லாபாய் சாத்தானின் பிடியினால் பாதிக்கப்பட்டு ரூ. 10,000 வரை செலவு செய்தும் சுகம் கிடைக்காமல் இவருக்காக ஜெபித்த போது தேவன் நல்ல சுகம் தந்தார்.

**Pr. தென்சிங் B. ராட்டுவா** **மோட்டா ராம்புரா**

ரமேஷ்பாய் என்பவர் சாத்தானின் பிடியில் பாதிக்கப்பட்டும் வாந்தி ஏற்பட்டு களைப்பினால் தவித்தும் வந்த வேளையில் இவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகம் தந்தார்.

கைகால் வலி ஏற்பட்டு அவதிப்பட்டு வந்த உதாலாபாய் என்பவருக்காக ஜெபித்த போது வேதனைகளை தேவன் மாற்றினார்.

**Pr. தினேஷ் U. பாமானியா** **பிப்ளியா**

பூனிபேன் என்ற சகோதரி சாத்தானின் பிடியில் பாதிக்கப்பட்டு விடுதலை கிடைக்காமல் கைகால் வேதனையோடு இருந்த வேளையில் இவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகத்தைக் கொடுத்தார்.

தல்லிபேன் என்ற சகோதரி 4 மாதங்களாக தொடர்ந்து வயிறு வலியினால் கஷ்டப்பட்டு வந்தார். இவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண விடுதலையைக் கொடுத்தார்.

## இராஜஸ்தான் மாநிலம்

**Pr. காலுசிங் L. கராசியா** **ராவ்தாசாத்**

ஹிராபாய் என்ற சகோதரர் 4 மாதங்களாக அசுத்த ஆவியின் பிடியில் பாதிக்கப்பட்டார். மந்திரம் செய்யும் பல வைத்தியர்களிடம் சென்றும் குணமாகவில்லை. நம் ஊழியர் இயேசுவைப் பற்றிக்கூறி இவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண விடுதலை கொடுத்தார்.

**Pr. சிவ்லால் S. பட்டேல்** **லாலாவாடா**

அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டு அதிக வேதனையில் இருந்த சுக்மாபேனுக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகம் தந்தார்.

பூர்ஜிபாய் என்ற சகோதரர் பல நாட்களாக தலைச் சுற்றினால் வேதனையில் இருந்தார். இவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகம் தந்தார்.

**Pr. சம்பத்தியால் J. டாமோர்** **ரோகன்யா லக்ஷ்மா**

பிரசவ நேரத்தில் அதிக கஷ்டப்பட்ட ஜேந்திபாய் என்பவருக்காக ஜெபித்தபோது தேவன் சுகப்பிரசவத்தைத் தந்தார்.

**Pr. தாவ்ரா டின்டோட்** **கதேடியா**

கீதாபேன் என்ற சகோதரி வயிறு வலியினால் மிகவும் சிரமப்பட்டு இருந்த போது இவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகத்தைக் கொடுத்தார்.

அல்காபாய் என்ற சகோதரர் 7 வருடங்களாக நடக்க முடியாமல் கஷ்டப்பட்டு வந்தார். இவருக்காக ஜெபித்த போது கர்த்தர் கிருபை செய்து இவர் நன்கு நடக்கும்படி சுகம் கொடுத்துள்ளார்.

**Pr. பாதாமிலால் M. மச்சார்** **கங்காடாதலை**

ரிசம் பேன் என்பவருக்கு பயங்கர வியாதி ஏற்பட்டு மிகவும் அவதிப்பட்டு வந்தார். இவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகத்தைக் கொடுத்தார்.

## மத்தியப்பிரதேசம் மாநிலம்

**Pr. நேமா காமோடு** **தெட்லா ரிங்கானியா**

சகோதரி மீராவின் கணவர் ரமேஷ் என்பவருக்கு சுகமில்லாமல் மருந்து மாத்திரைகள் பல முறை சாப்பிட்டும் சுகம் கிடைக்காமல் இவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகம் தந்தார்.

**Pr. சாமரியா N. பாகேல்** **போர்டியா**

வேல்தாபாய் என்ற சகோதரர் T.B நோயினால் பாதிக்கப்பட்டு பல வைத்தியங்கள் செய்தும் குணமடையாமல் கடைசியில் இவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகம் தந்தார்.

**Pr. தினேஷ் M. புரியா** **குவாளி**

வாசுபேன் என்பவர் பயங்கர வியாதியில் கஷ்டப்பட்டு விடுதலை இல்லாமல் இறுதியில் இயேசுவை விசுவாசித்து போதகரிடம் வந்து ஜெபித்த போது தேவன் பூரண சுகம் கொடுத்தார்.

பாரத்பாய் என்பவர் அசுத்த ஆவியினால் கஷ்டப்பட்டு விடுதலையின்றி தவித்த போது இவருக்காக ஜெபித்த போது தேவன் விடுதலை கொடுத்தார்.

**Pr. துர்சிங் N. ராட்டுவா** **பாதாகேடா**

சங்கர்பாய் என்ற சகோதரர் T.B வியாதியினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்குச் சென்றும் எந்தப் பலனுமில்லாமல் ஷாலோம் ஆலயத்தில் வந்து ஜெபித்த போது தேவன் பூரண சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. தேவ்சிங் G. ஜாமார்** **அந்தர்சூயா**

நானுராம் என்பவர் வயிறு வலியினால் கஷ்டப்பட்டு பல வைத்தியங்கள் செய்தும் குணமடையாமல் ஷாலோம் ஆராதனையில் கலந்து கொண்டு ஜெபித்த போது அற்புத சுகம் கிடைத்தது.

## வெண்ணங்கி தரித்தோர் வரிசையில்



பெயர் : NúLô. **I.A.** ù_VTôp

பிறப்பு : **06.03.1954,** இறப்பு : **12.10.2013**

வயது : **59**

"SpX úTôWôhPjûRl úTôWô¥ú]u, KhPjûR Ø¥júRu, ®ÑYôNjûRd LôjÕd ùLô iúPu". (2 தீமோ : 4:7)

கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம். நம் அன்பு பகிர்வு இயக்கம் தலைமை அலுவலகத்தில் கடந்த 01.01.2009 முதல் சுமார் 5 வருடங்களாக **சகோதரர். ஜெயபால்** அவர்கள் சிறப்பாகப் பணியாற்றி வந்தார்கள். இவருக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளை உண்மையுடனும் பொறுப்புடனும் செய்து வந்த தேவ ஊழியர். தலைமை அலுவலகத்திலுள்ள உடன் ஊழியர்களுடன் மிகவும் அன்போடு பழகி வந்தவர். தேவனுக்குப் பயந்து வாழ்ந்த நல்ல ஊழியர்.

இவர் கடந்த 12.10. 2013 சனிக்கிழமையன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்கள். இவரின் நினைவு நம் மனதில் என்றும் நீங்காத நினைவலைகள். இவரின் மனைவிக்காகவும், திருமணமாகிய இரண்டு பெண்பிள்ளைகளின் குடும்பங்களுக்காகவும் அனைவரும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

# ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

நாள்
**09.11.2013,**
***சனிக்கிழமை***

நேரம்
*மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை*


*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**
M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)
வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

**அனைவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிப்பதுடன், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.**

தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை,** Cell : 94876-89869,
**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820

மிஷனெரி முன்னோடிகள்

# _ô i ù_¥ (1815 - 1872)



**“தென்கடல் பிரஸ்பிட்டேரியன் மிஷனெரி”**

**“ஜாண் ஜெடி”** ஸ்காட்லாந்தில் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்தார். தகப்பன் கடிகாரத் தொழில் புரிபவர். மற்றும் பிரெஸ்பிட்டேரியன் சபையில் உதவிக் குருவாக பணிபுரிந்தார். 2 வயது இருக்கும் போது ஜாணின் பெற்றோர்கள், நோவா ஸ்காட்டியோவில் குடியேறினார்கள். ஜாணும் அவரது சகோதரியும் ஹாக்ஸ் பள்ளியில் படித்தார்கள்.

**ஜாண்** மிகவும் சுறுசுறுப்பானவர், ஊழியத்தில் ஆர்வமுள்ளவர். **ஜாண் பனியன்போல்** ஆழமாய் பாவங்களை அறிக்கையிட்டவர். கிறிஸ்துவின் அன்பு, அவருடைய எல்லாத் தண்டனையின் பயத்தையும் நீக்கிவிட்டது. தூர இடங்களில் கிடைத்த சுவிசேஷ வெற்றியைப் பற்றி புத்தகங்களைப் படித்துத் தெரிந்து கொண்டார். சுவிசேஷத்தின் இன்றியமையாத தேவையுள்ள நாடுகள் பற்றிய விவரங்களை அறிந்து கொண்டார்.

19ஆவது வயதில் 22–4–1834 இல் பிரஸ்பிட்டேரியன் சபை அங்கத்தினராகச் சேர்ந்தார். Ts° I T¥I û T Ø¥j Õ, úYRdLUd Lpí ¬« p T¥j Õ (D.D.) டாக்டர் ஆப் டிவினிட்டி பட்டம் பெற்று, 23ஆவது வயதில் 13–03–1838இல் பிரின்ஸ் எட்வர்டு தீவில் உள்ள சபைக்குப் போதகராக அபிஷேகம் பண்ணப்பட்டு, 7 வருடம் அங்கு ஊழியம் செய்தார். 24வது வயதில் சார்லட் மக்டொனால்டு (Charlotte McDonald) என்ற பெண்ணை மணந்தார். அவர்களுக்கு நான்கு பிள்ளைகள் இருந்தனர்.

**ஜாண் ஜெடி** தான் பணியாற்றி வந்த திருச்சபையை ஒரு மிஷனெரி திருச்சபையாக மாற்றினார். அத் திருச்சபை, தென் கடலில் உள்ள தீவுகளில் மிஷனெரி ஊழியம் செய்யத் திட்டமிட்டது. அதற்கு ஜாண் தம்பதிகளை முதல் மிஷனெரியாக அனுப்பி வைத்தனர். ஜாணின் மருத்துவ அறிவும் மெக்கானிக்கல் திறமையும் அத்தீவில் அரக்கர்களின் மத்தியில் ஊழியம் செய்யப் பேருதவியாக இருந்தது.

சாத்தானின் இருண்ட கோட்டைக்குள் மீட்பர் இயேசுவின் கட்டளைப் படியும் ஆண்டவர் பிரசன்னம் எப்போதும் தன்னுடன் இருப்பதாலும் தூர தேசமாகிய அனீட்டோம் தீவுக்கு மிஷனெரியாக நாங்கள் செல்லுகிறோம். பாடுகள் உண்டு என்று நன்றாகத் தெரிகிறது. ஆகிலும் மீட்பர் இயேசுவின் நுகம், மீட்பின் அன்பைப் பெற்ற எங்களுக்கு அது கர்த்தர் தரும் கனம் என்று நம்பி அங்குச் செல்லுகிறோம் என்று 30.11.1846இல் கப்பல் புறப்படுமுன் ஜாண் சொன்னார்.

1948இல் 33ஆவது வயதில் அனீட்டோம் தீவுகளில் வந்து சேர்ந்து அந்தத் தீவை மையமாக வைத்து ஜாண் தம்பதிகள் ஊழியத்தை ஆரம்பித்தனர். அந்தத் தீவின் மொழியான அனீட்டோமிஸ்

என்ற மொழியை மிகவும் ஆர்வத்தோடு கற்றுத் தேறினார். அவர்கள் செய்த முதல்ப்பணி, அந்த மொழியை எழுத்து வடிவில் உருவாக்கி, அச்சடித்து வேத அறிவை அந்தத் தீவு மக்கள் பெற்றுக் கொள்ள முயற்சி மேற்கொண்டனர்.

தீவின் மக்கள் தங்கள் முகங்களில் சாயம்பூசி, பார்க்க அவலட்சணமாயிருந்தார்கள். ஆண்கள் அரைநிர்வாணமாய் இருந்தார்கள். தலைமுடியை நீளமாக வளர்ப்பதைப் பெருமையாக எண்ணினார்கள். முடிக்கு சிவப்புச் சாயம் பூசி பல ஜடைகள் பின்னித்தொங்கப் போட்டிருந்தார்கள். காதுகளில் துவாரமிட்டு, ஆமை ஓட்டினால் செய்த வளையங்களைப் போட்டிருந்தார்கள். பெண்கள் முடியைக் கட்டையாக வெட்டி, இடுப்பில் இலைகளால் செய்யப்பட்ட ஒட்டியாணம் போட்டிருந்தார்கள்.

தேவையற்ற குழந்தைகளைக் கொல்லும் பழக்கம் சாதாரணமாக அத்தீவில் காணப்பட்டது. கணவன் இறந்தால் கூடவே மனைவியையும் கொன்று புதைக்கும் பழக்கம் இருந்தது. வளர்ந்த மகன் இருந்தால், அவன் தன் தாயின் கழுத்தை நெரித்துக் கொல்லும் கொடூரச் செயலைச் செய்ய வேண்டும். கவனிக்க முடியாத சிறு குழந்தைகளுக்கும் தாய்க்கு நேர்ந்த கதியே ஏற்படும்.

அத்தீவு ஜனங்கள், மனித மாமிசமே எல்லா உணவைக்காட்டிலும் சுவையானது என்று கூறியுள்ளனர். தங்களின் எதிரிகளைக் கொன்று நரமாமிசம் உண்ணும் பழக்கம் காணப்பட்டது. இம்மிஷனெரிக்குத் தெரிந்த ஒரு மனிதன் தன் குழந்தையையே கொன்று தின்றான். அவர்கள் மொழியில் மீட்பின் அன்பைப் பற்றிச் சொல்ல என் உள்ளம் துடிக்கிறது என்று ஜாண் கூறியுள்ளார். இந்த அறியாமை இருளில் மூழ்கியிருக்கும் மக்களை இயேசுவின் அன்பின் கயிறுகளால் கட்டி இழுக்க ஆவல் கொண்டார் ஜாண் கெடி.

இயேசு தம் பரிசுத்த இரத்தத்தால் நம் பாவங்களைக் கழுவி, மீட்டு இரட்சித்த அந்த விலையேறப்பெற்ற அன்பைத் தவிர வேறு எதுவும் இத்தீவு மக்களை மாற்ற முடியாது என்று தன் கடிதத்தில் ஜாண் கெடி எழுதியிருந்தார்.

கனடா, ஸ்காட்லாந்து மற்றும் லண்டன் மிஷனெரி சங்கத்துக்குக் கடிதம் எழுதி, மேலும் மிஷனெரிமார்களை அனுப்பும்படி ஜாண் கெடி கேட்டார். எனினும் அநேக ஆண்டுகள் ஜாண் தம்பதிகள் தனிமையாகத்தான் ஊழியம் செய்தனர். கடைசியில் **ஜாண் பேட்டன் (John Paton)** போன்ற மிஷனெரிமார்கள், தேசத்தை சுதந்தரிக்கும்படி அனுப்பிவைக்கப்பட்டார்கள், அவர்களும் வந்து சேர்ந்தார்கள்.

பள்ளிகள் முதலாவது ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் மக்கள் ஒருவரும் அதில் விருப்பங்காட்டவில்லை. மாறாக பள்ளிக்கு வந்தால் எவ்வளவு பணம் தருவீர்கள் என்று கேட்க ஆரம்பித்தார்கள்.

வீடுவீடாகச் சென்று தனிநபருக்கு சுவிசேஷம் சொன்னார்கள். கிராமம் கிராமமாகச் சுற்றி பிரயாணம் செய்து நற்செய்தி அறிவித்தார்கள். ஆனால் ஒருவர்கூட மனந்திரும்பியபாடில்லை. யாரும் ஆர்வம் காட்டவில்லை. மிகவும் நிர்விசாரமாக வாழ்ந்து வந்தனர். மேலும் ஜாண் தம்பதிகளைக் கொலை செய்ய முயற்சி செய்தார்கள். அநேகந்தரம் காயப்பட்டார்கள், துன்புறுத்தப்பட்டார்கள்.

ஆனாலும் அயராது சோர்ந்து பேகாமல் தொடர்ந்து பாடுகளின் மத்தியிலும் இயேசுவின் மீட்பின் அன்பைப் பற்றி சொல்லி, அதை செயலிலும் காட்டி, மிகவும் பொறுமையாக ஊழியம் செய்தனர்.

பல ஆண்டுகளுக்குப் பின் ஆத்தும அறுவடைக்குக் கதிர் கிடைத்தது. வேதாகமத்தை வாசிக்கவும் நேசிக்கவும் மக்களுக்குக் கற்றுக் கொடுத்தார். சுவிசேஷ ஊழிய தரிசனத்தை மக்களிடையே புகுத்தி அவர்கள் மற்றத் தீவு கூட்டங்களுக்கும் சென்று ஊழியம் செய்ய ஏற்பாடு செய்தார். அநேக சுதேச ஊழியர்கள் ஆர்வத்தோடு புறப்பட்டுச் சென்றனர். அநேகர் இரத்த சாட்சிகளாகவும் மரித்தனர். அனீட்டோம் தீவில் வியக்கத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன.

அத்தீவில் அநேகக் குழந்தைகளைக் கொன்று உண்ட அத்தீவின் தலைவன், மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக் கொண்டான். அநேகப் பள்ளிகள் திறக்கப்பட்டன. முதலில் புதிய ஏற்பாடும் பின்பு பழைய ஏற்பாடும் அச்சிடப்பட்டு அங்குள்ளவர்களுக்குக் கொடுத்தனர். ஆயிரக்கணக்கில் ஜனங்கள் மனந்திரும்பி கிறிஸ்துவின் மந்தையில் சேர்க்கப்பட்டனர். 25 புதிய சபைகள் நிறுவப்பட்டு, ஞாயிறு ஆராதனை நடத்தப்பட்டது.

**கடைசி நாட்களும் மரணமும்**

சுமார் 24 ஆண்டுகள் இந்தத் தீவில் ஊழியம் செய்து, 57ஆவது வயதில் 14–12–1872இல் ஜாண் கெடி மறுமைக்குள் பிரவேசித்தார். அவரைப்பற்றிய கல்வெட்டுகளில் **"1848ஆம் ஆண்டு அவர் இங்கு வரும்போது ஒரு கிறிஸ்தவனும் இல்லை; 1872ஆம் ஆண்டு அவர் இந்த உலகத்தை விட்டுப் பிரிந்தபோது கிறிஸ்துவை அறியாதவன் ஒருவன் கூட இல்லை"** என்று எழுதப்பட்டிருப்பது பெரும் சாட்சியாக இருக்கிறது.

**பிரியமானவர்களே,** எங்களது வாழ்க்கையில் 27 ஆண்டுகளுக்கு முன்பாக திருமணமான 40 ஆவது நாளில் ஊழியம் செய்யும்படியாக பணித்தளத்திற்கு வந்தபோது, பல ஆயிரம் கிராமங்களில் இயேசு என்ற பெயர் கூட தெரியமால் ஜனங்கள் அந்தகாரத்தில் வாழ்ந்து வந்தனர். இந்த நேரத்தில் மேற்கண்ட மிஷனெரி **ஜாண் ஜெடி** அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தபோது, எங்கள் உள்ளங்களை தேவன் ஆத்துமப் பாரத்தினால் நிரப்பினார்.

இந்த மிஷனெரியினைப் போலவே எங்கள் வாழ்நாள் முடிவதற்குள்ளாகவே பீல் மக்கள் வசிக்கும் 7000 கிராமங்களிலும் விசுவாசிகளை உருவாக்கி, 7000 சுதேச ஊழியர்களை எழுப்பி, 7000 கிராமங்களிலும் சபைகளை ஸ்தாபிக்க வேண்டும் என்ற பாரத்துடனும் தரிசனத்துடனும் உழைத்து வருகிறோம். தற்போது தேவன் கிருபையாக 1300 கிராமங்களில் விசுவாசிகளைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். தொடர்ந்து எங்கள் வாழ்கை முடிவதற்குள்ளாக தேவன் தந்த இந்த தரிசனத்தினை நிறைவேற்றும்படியாக, எங்களோடு இணைந்து **ஆரோன்,** மற்றும் **ஊரைப்** போல ஜெபித்து தாங்கும் குடும்பங்களாக சபைகளாக உங்களை வரவேற்கிறோம். தேவனுக்கே மகிமை!

**பிஷப். V. தேவதாஸ் – சகோதரி. வஹிதா தேவதாஸ்**



# ஷாலோம் - வேத வினாப் போட்டி 8

**பதில் எழுதுக :**

1. "எண்ணெய் மாண்டுபோயிற்று" இருப்பிடம் கூறு.
2. பூர்வகால முதல் தண்ணீர் தடாகம் போல் இருந்தது எது?
3. கர்த்தர் தந்த தீபம் எது?
4. எது சரீரத்தின் விளக்காயிருக்கிறது?
5. எரிகோவுக்கு எதிரான மலை எது?
6. அழிவு வருமுன் மனுஷனுடைய இருதயம் எப்படி இருக்கும்?
7. பகல் இருண்டு போகும் எங்கே?
8. சூரியனுக்குக் கீழேயுள்ள நீதி ஸ்தலத்தில் என்ன இருந்தது?
9. தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தவன் யார்?
10. ஒட்டகங்களின் கொட்டகை எது?

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **18.11.2013**

**கடந்த மாத போட்டிக்கான சரியான விடைகள் :**

1. எருசலேம். (சகரியா 8 : 3)
2. சாப்நாத் பன்னேயா (ஆதி. 41 : 45)
3. கர்த்தருடைய சத்தம் (சங். 29:9)
4. மனமகிழ்ச்சி (நீதி. 17 : 22)
5. தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் (1 கொரி. 14:4)
6. விவேகத்தின் வழியை விட்டுத் தப்பி நடக்கிற மனுஷன். (நீதி. 21 : 16)
7. சித்தீம் பள்ளத்தாக்கு (ஆதி. 14 : 10)
8. நாகமான் (2 இராஜா. 5 : 1)
9. சாப்பாத்தின் குமாரன் (2 இராஜா. 3:11)
10. ஏதோமியர் (மல்கியா 1 : 4)

**கடந்த மாத வேத வினாப் போட்டி 7–ல் சரியான விடையினை தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

**1. Sis. J. அலிஸ் எபனேசர், தூத்துக்குடி. 2. Dr. பிரைசி, சென்னை, 3. Sis. A. ஜெபக்கனி, சங்கரன்கோவில்.**

பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி


**SHARING LOVE MISSION**

New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- ❖ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ காணிக்கைகளை M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ❖ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.
- ❖ உங்களது வங்கிக் கணக்கில், Net Transfer வசதி இருந்தால் Net Transfer மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.
- ❖ **www.shalommission.in** இணைய தளத்தின் மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.

***நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகளில் எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.***

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

**AXIS BANK** — **A/c. No. : 105010100094373 (IFS Code : UTIB0000105)**

**ICICI Bank** — **A/C. No. 613901112799 (IFS Code : ICIC0006139)**

***குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப,***

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கின் பெயர் | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கிக் கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கிக் கணக்கு எண் | : | **174100710400061 - Tiruchendur Road Branch - Tuticorin** |

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் காணிக்கை செலுத்தியபின், உடனடியாக இந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள்.

## நாட்டு நடப்புச் செய்திகள்

பொருளாதாரதிற்கான இந்த ஆண்டின் நோபல் பரிசு, **1960** ஆம் ஆண்டிலிருந்து பொருளாதார ஆய்வில் ஈடுபட்ட அமெரிக்க வல்லுநர்கள் மூவருக்கு வழங்கப்பட்டுள்ளது. **யூஜீன் ஃபாமா, லார்ஸ் பீட்டர் ஹான்சென் மற்றும் ரொபர்ட் ஷில்டர்** ஆகிய மூவரும் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களைக் கருத்தில் கொள்ளாமல் சந்தைகளின் பொதுவான போக்கு பற்றி ஆராய்ந்துள்ளனர். சந்தைகளில் பங்குகள் மற்றும் சொத்துக்களின் விலைகளை மூன்று முதல் ஐந்தாண்டு காலத்திற்கு ஆராய்ந்து சந்தைகளின் போக்கை முன்கூட்டியே கணிப்பதில் இவர்கள் வல்லவர்கள்.

---

கடந்த மாதம் பாய்லின் என்ற புயல் இந்தியாவின் கிழக்கு பிரதேசத்தைத் தாக்கியதையடுத்து ஏற்பட்ட அழிவில், இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். புயல் தாக்கிய ஒடிஷா (ஒரிசா) மாநிலத்தில் மின்சாரம் மற்றும் தொலைத் தொடர்புகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

---

நவீன கைத்தொலைபேசிகளைக் கொண்டே கண்களைப் பரிசோதித்து பிரச்சினைகளை கண்டுபிடிக்க ஒரு மென்பொருளை லண்டன் ஸ்கூல் ஆஃப் ஹைஜீன் அண்ட் டிராப்பில் மெடிசனைச் சேர்ந்த ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். நவீன கைத் தொலைபேசிகளில் இருக்கும் கேமிராக்களையும் ஃபிளாஷையும் கொண்டு, இந்த அப்ளிகேஷன் கண்ணின் விழித்திரையை ஸ்கேன் செய்கிறது. இது தவிர ஒருவருடைய பார்வைத் திறனை அளக்க உதவும் அது சம்பந்தமான எழுத்துக்களும் இந்த அப்ளிகேஷனில் உண்டு.

---

கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக பிரபல கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் அறிவித்துள்ளார். ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் அதிக ரன்கள் மற்றும் சதங்களை எடுத்து சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட் உலகில் பல சாதனைகளைச் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நன்றி : www.bbc.co.uk


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

# கிறிஸ்துமஸ் பண்டிகையை ஆதிவாசி மக்கள் கொண்டாட உதவுங்கள்



**"உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிறஒளியே அந்த மெய்யான ஒளி". யோவான் 1:9**

உலகத்தை இரட்சிக்க பாலகனாய் பூமியில் கிறிஸ்து அவதரித்த அந்த நன்னாளில், கிறிஸ்துவின் தியாகத்தையும், தாழ்மையையும் நினைத்து நன்றி கூறுவதோடு மட்டுமல்லாமல் அவருடைய சுவிசேஷத்தை உலகத்திற்கு அறிவிப்பதும் நமது கடமையாகும். கிறிஸ்து பிறந்த அந்த நாளை நினைத்து நாம் கொண்டாடுவது மட்டுமல்ல, நம்மைச் சுற்றியுள்ள எளியவர்களுக்கு நம்மால் இயன்ற வரையில் உதவி செய்ய கர்த்தர்தாமே பலப்படுத்துவாராக!

வருடந்தோறும் கிறிஸ்துமஸ் காலங்களில் நம்முடைய சுதேச ஊழியர்களுக்கும் அவர்கள் மனைவிமார்களுக்கும், அவர்கள் பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் கொடுத்து, அவர்களும் கிறிஸ்துமஸ்–ஐ மகிழ்ச்சியாய் கொண்டாட உதவி செய்ய தேவன் நமக்குத் தந்த கிருபைக்காக அவரைத் துதிப்போம். அதே போல் நம்முடைய பள்ளி மற்றும் விடுதியில் படித்துவரும் நம் ஆதிவாசி மாணவ, மாணவிகளுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் மற்றும் வெகுமதிகளை ஒவ்வொரு கிறிஸ்துமஸ் தினத்திலும் கொடுத்து வருகிறோம்.

இந்த ஆண்டும் இந்த காரியங்களுக்காக சுமார் ரூ. 10 லட்சங்கள் வரை தேவையுள்ளது. ஆகவே கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் ஒரு சுதேச ஊழியரின் குடும்பத்திற்கு குறைந்தது ரூ. 1000/– அல்லது அதற்கு மேலாகவோ, ஒரு பீல் ஆதிவாசி மாணவருக்கு குறைந்தது ரூ. 500/– அல்லது அதற்கு மேலாகவோ, கிறிஸ்துமஸ் வெகுமதியாக அக்டோபர் அல்லது நவம்பர் மாத ஆதரவுத் தொகையோடு சேர்த்துக் கொடுத்து உதவ அன்பாய் அழைக்கிறோம்.

நீங்கள் கொடுக்க விரும்பும் காணிக்கைகளை நேரடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம். அல்லது எங்கள் ஷாலோம் பிரதிநிதிகளிடம் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளலாம்.



*"...மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்". -இயேசு (மத்தேயு 25:40)*

**இந்த பீல் மக்களின் சந்தோஷத்தோடு கிறிஸ்துமஸ்–ஐ வரவேற்று, தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோம்!!**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

**BLESS A CHILD - PROJECT**



மாணவியின் பெயர் : **ஷாக்ஸி மச்சார்**

தந்தையின் பெயர் : சீமோன் மச்சார்

தாயார் பெயர் : ரமிளா மச்சார்

பிறந்த நாள் : 24.09.2005

படிக்கும் வகுப்பு : 3rd Std.

சொந்த ஊர் : பிம்பூரி

மாவட்டம் & மாநிலம் : ஜாபுவா, மத்தியப்பிரதேசம்

## மாணவியின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:–

இவளுடைய தந்தை இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவர். அசுத்த ஆவிகளை வணங்கி வந்ததால் இவருடைய மனைவி பைத்தியம் பிடித்து காணப்பட்டார். பல மருத்துவ சிகிட்சைகளை மேற்கொண்டும் எந்த பலனுமில்லை. ஷாலோம் ஊழியரிடம் சென்று ஜெபித்தபோது தேவன் அற்புதமாக விடுதலை கொடுத்தவுடன் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். தொடர்ந்து வேதம் வாசித்து ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து சபையின் விசுவாசிகளாக இருந்து வருகிறார்கள்.

**மாணவியைக் குறித்து :–** சாக்சி நன்றாக படிப்பாள். விளையாடுவதில் மிகவும் ஆர்வம் கொண்டவள்.

**ஜெபியுங்கள் :–** படிப்பிற்காக, சுகத்திற்காக, பெற்றோர் செய்யும் வேலைக்காக ஜெபியுங்கள்.

**மாணவியைத் தாங்குபவர் :–** ***Mrs. K. Selvi*** *- Thoothukudi.*

## ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 600/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 947 மாணவர்களில் இன்னும் 147 **மாணவ மாணவியர்களுக்கு ஆதரவாளர்கள் தேவைப்படுகிறார்கள்.**

***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்திவையுங்கள்.